Registerec in Ceylon as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது சித்திரை 20 ஆம் நாள் துல்கஃதா 27 (3-5-62) வியாழக்கிழமை இதழ் 81

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# ஜி. சி. ஈ. (ஆகஸ்ட்)

## பரீட்சை ஒத்திவைப்பு

## டிசம்பர் பரீட்சை முடிவு தாமதமே காரணம்

கொழும்பு, புதன்

இவ்வருடம் ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையின் விண்ணப்ப திகதியை பரீட்சைக் கமிஷனர் ஒத்திவைத்துள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. (சாதாரணம் பரீட்சையின் முடிவுகள் வெளியாவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகவே ஆகஸ்ட் பரீட்சை விண்ணப்ப திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சில மேற்பார்வையாளர்கள், விடைத்தாள்கள் திருத்துபவர்களிடம் விடைத் தாள்களை அனுப்பியபோது, கலைத்துறைப் பகுதி விடைத் தாள்கள் விஞ்ஞானப் பகுதி விடைத் தாள்களைத் திருத்துபவர்களிடமும் விஞ்ஞானப் பகுதி விடைத் தாள்கள் கலைத்துறைப் பகுதி விடைத்தாள்கள் திருத்துபவர்களிடமும் அனுப்பியதாலேயே இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் அனுப்பப்பட்ட விடைத் தாள்கள் பரீட்சைப் பகுதியினரால் திருப்பிப் பெறப்பட்டு சரியானவகையில், திருத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

## மரத்தில் ஏறிய ஆசாமி

### குறைபாடுகளை மந்திரி நீக்கவேண்டுமாம்!

கொழும்பு, புதன்

கொழும்பு, கறுவாக்காட்டிலுள்ள கலாபவனத்துக்கருகிலுள்ள சுமார் 150 அடி உயரமான 'மாரு' மரமொன்றில் இன்று காலை பதினொரு மணிக்கு ஏறிய ஒருவர், தமது குறைபாடுகளை, பிரதம மந்திரியோ அல்லது மந்திரி திரு. 'சி. பி. டி' சில்வாவோ அல்லது நிதிமந்திரியோ நேரில் வந்து கேட்கும்வரை, மரத்தை விட்டு இறங்கமாட்டேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்! ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீலநிறக்கொடியை இவர் கழுத்தில் கட்டியிருக்கிறார்.

குறிப்பிட்ட நபரை மரத்திலிருந்து இறங்கும்படி பொலிஸார் கேட்ட சமயம், 'தம்மை யாரும் துன்புறுத்தினால், மரத்திலிருந்து கீழே விழுந்துவிடுவதாகவும், தமது குறைபாட்டை மந்திரி எவரும் கேட்கும்வரை மரத்திலிருந்து இறங்குவதில்லையென்றும்' கூறினர். பெருந்திரளான மக்கள் இக்காட்சியைப் பார்வையிடுகின்றனர்.

இதுசம்பந்தமாக கறுவாக்காட்டு பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், இன்று இரவுவரை குறிப்பிட்ட நபர் மரத்திலிருந்து இறங்கவில்லையென்றும், பொலிஸார் அந்த இடத்தைத் தொடர்ந்து நாளை காலைவரை காவல் புரிவார்கள் என்றும் கூறினர்.

## ராஜரத்தினவை எதிர்த்து சுதந்திர, யு.என்.பி. போட்டி

### வெலிமடை உபதேர்தல் ஜூலையில் நடபெறும்?

கொழும்பு, புதன்

வெலிமடை இடைத்தேர்தலில் போட்டியிடும் திரு. கே. எம். பி. ராஜரத்னவுக்கு எதிராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கியதேசியக் கட்சியும் அபேட்சகர்களை நிறுத்தும். மேமாத இறுதிவாரத்தில் அபேட்சகர்கள் மனு தாக்கல்செய்வதற்கான திகதி குறிப்பிடப்படும் எனத் தெரிகிறது. ஜூலைமாத நடுப்பகுதியில் தேர்தல் நடைபெறுமென நம்பப்படுகிறது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, திரு. பி. பி. ரத்னயக்காவை தனது அபேட்சிகராக நிறுத்துமெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் திரு. பேர்னி சமரவிக்கிரமா போட்டியிடுவார் எனவும் தெரிகிறது.

அநுராதபுரத் தொகுதியின் இடைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக திரு. எச். மகதிலுவெவ போட்டியிடுவார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகரின் பெயர் இன்னும் தெரிவிக்கப்படவில்லை.

## 'அணு ஆயுத சோதனையால் மனிதகுலம் அழியப்போகிறது'

### நேரு கவலை

புதுடில்லி, மே 2

"அணு ஆயுத சோதனைகளை மீண்டும் ஆரம்பித்ததினால் உலகம் இன்று பேராபத்துக்குள்ளாகியிருக்கிறது. அமெரிக்கா - ரஷ்யா அணு ஆயுத சோதனைகளை ஆரம்பிப்பதினால் இனிமேல் தோன்றப்போகும் மனித குலமே பூண்டோடு அழியப்போகிறது" என்று ராஷ்டிரபதி உரைமீதான விவாதத்திற்கு பிரதமர் நேரு இன்று லோகசபையில் பதிலளித்துப் பேசுகையில் கூறினர்.

எல்லைப் பிரச்சினை குறித்து பாரதப் பிரதமர் நேரு பேசுகையில், சீன இன்னும் சமாதானத்தை நிலைநாட்டாமல் இருப்பது பெரிதும் வருந்தத்தக்க செயதிலென்றும், சீனவுக்கும் பாரதத்துக்கும் போர் மூளுவதும் மூளாததும் நம் கையில் இல்லையென்றும், எல்லை விஷயத்தில் பாரதம் சிறிதளவும் விட்டுக்கொடுக்காதென்றும் கூறினர்.

பாகிஸ்தான் குறித்து அவர் பேசுகையில், உலகம் முழுவதும் பாரதத்தைக் குறை கூறுவதுதான் பாகிஸ்தானின் முக்கிய குறிக்கோள் என்றும் ஏதோ ஒரு காலத்தில் பிரச்சினைகள் எல்லாம் சுமுகமாகத் தீர்ந்துவிடுமென்று நம்புவதை விட வேறு ஒன்றும் சொல்வதற்கில்லையென்றும் கூறினர்.

உலகம் யுத்தத்தில் சிக்காமல் இருந்தால் பொருளாதாரத் துறையில் பாரதம் அரும் பெரும் சாதனைகளை நிலைநாட்டுமென்றும், பாரதத்தில் வேலை இல்லாத் திண்டாட்டம் படிப்படியாகக் குறைந்து வருகிறதென்றும் அவர் மேலும் கூறினர்.

## அம்பிகை நடராஜா யாழ்ப்பாணம் வந்தார்

யாழ்ப்பாணம், புதன்

சென்னை அடையாறு கலாசேத்திரத்தைச் சேர்ந்த குமாரி அம்பிகை நடராஜா இந்தியாவிலிருந்து விமான மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தபோது பலாலி விமான நிலையத்தில் அவரை தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினரும் பல் பெண்மணிகளும் நண்பர்களும் சென்று மலர்மாலையிட்டு வரவேற்றனர்.

இம்மாதம் 4-ம் திகதி யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்க நிதிக்காக இவர் நடனவிருந்தளிக்க இங்கு வந்திருக்கிறார்.

சேத்திரத்தைச் சேர்ந்த பக்கவார்த்திய இசைக் கோஷ்டியும் யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கிறது.

## கேன்ஸ் திரைப்பட விழா

### இலங்கையும் கலந்து கொள்ளும்

கொழும்பு, புதன்.

கேன்ஸ் சர்வதேசத்திரைப்பட விழாவில். இலங்கையும் கலந்து கொள்ளுமெனத் தெரிகிறது. தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த நடிகர் நடிகைகளுக்கும், டைரக்டர் கதாசிரியர்களுக்கும் அங்கு தங்கப்பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும்.

# தமிழர் சிங்களமும் சிங்களவர் தமிழும் கற்க வசதிசெய்க!

## அரசாங்கத்துக்கு ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

### ஆங்கிலத்தை கட்டாய பாடமாக்க யோசனை

கொழும்பு, புதன்

ஆங்கிலத்தை ஒரு கட்டாய பாடமாக்கும்படி அகில இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுள்ளது.

சிங்களப் பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்கவும், தமிழ்ப் பிள்ளைகள் சிங்கள மொழியைக் கற்கவும் வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் ஆசிரியர் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

ஆங்கிலத்தை ஒரு இஷ்ட பாடமாக்குவது ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தைக் குறைப்பதுடன் பிள்ளைகளின் கல்வித் தரமும் பாதிக்கப்பட்டுவிடுமென்று ஆசிரியர் சங்கம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

தேசிய கல்விக் கமிஷனின் இடைக்கால அறிக்கையைப் பரிசீலனை செய்து அதுபற்றிய கருத்தைத் தெரிவிக்கையிலேயே அகில இலங்கை ஆசிரியர் சங்கம் இவ்வாறு அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

ஆங்கிலம் ஒருகட்டாய பாடமாக இருக்கக் கூடாதென்றும் ஐந்தாம் வகுப்புக்குக் குறைந்த வகுப்புகளில் ஆங்கிலம் படிப்பிக்கக் கூடாதென்றும் தேசிய கல்விக் கமிஷன் தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இன்றுள்ள நிலையில் இரு பெரும் சமூகங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் ஒருவர் மொழியை மற்றவர் கற்பதால்தான் சமூக ஒற்றுமையை வளர்க்க முடியுமென்பதைத் தவிர வேறு வழி எதுவும் தோன்றவில்லையென்று ஆசிரியர் சங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது.

## ஜெனிவாவில் யுதாண்ட்

ஜெனிவா, மே 2

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட், நியுயோர்க்கிலிருந்து இன்று ஜெனிவா வந்து சேர்ந்தார். விமானநிலையத்தில் நிருபர்கள் மத்தியில் திரு. யுதாண்ட் பேசுகையில், ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசியாகத் தாம் பதவியேற்றபின்னர், ஜெனிவா வருவது இதுவே முதல்தடவையென்றும், தாம் இங்கு வந்தது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் கூறினர்.

## இன்று உங்கள் பலன்

–சோதிடஆசான்செ.தெல்லியூர்–

சுபகிருதுஆண்டு சித்திரைத் திங்கள் 20ம் நாள் வியாழக்கிழமை (3-5-62) ஹஜ்ரி வருடம் 1381, துல்கஃதா 27ம் பிறை.

பகல் 12-25வரை சதுர்த்தசி. பின் அமாவாசை. இரவு10-58 வரை அச்சுவினி. பின் பரணி. அமிர்த சித்தயோகம். அமாவாசை விரதம். இராகுகாலம் 1-26முதல்2-56வரை.

அனுஷம்; கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சிநாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளலாகாது.

### இராசிப்பலன்

அச்சுவினி - பரணி: இவர்களுக்கு பெண்களால் கஷ்டம், குடும்பசுகக்குறைவு, செய்தொழில் நன்மை, பணவரவு, சமூகமதிப்பு ஆதியன உள.

மேடம்: குடும்ப கஷ்டம், மாதர் தொல்லை, பணமுடை, தொழிலில் கடும்உழைப்பு, பலிதம் குறைவு.

இடபம்: தொழில் மேன்மை, குடும்பசுகம், மக்களால்நன்மை, பணவரவு, வித்தைச்சிறப்பு.

மிதுனம்: குடும்பக் கலகம், தாயாதிகளால் இடர். மனத்தளர்ச்சி, தொழிற்கேடு, பணமுடை.

கடகம்: வித்தைச் சிறப்பு, பெரியோர் நட்பு, குடும்பசுகம், தொழிற் சிறப்பு, பணவரவு.

சிங்கம்: பிரயாணசுகம், தொழில்வெற்றி, மதிப்பு, முதியோர்உதவி, கடன்வரவு.

கன்னி: நலக்குறைவு, தொழிற்குமதம், மனச்சஞ்சலம், இனசனபகை, பணவீண்விவகாரம்.

துலாம்: தெய்வ வழிபாடு, தருமச்செலவு, நல்லோர் தரிசனம், தொழில்வெற்றி, பணமுடைநீக்கம்.

விருச்சிகம், பிரயாணம், நம்பி ஏமாறுதல், அலைச்சல், தேகநலக்குறைவு, பணச் செலவு.

தனு: பிதுருவழி உதவி, குடும்பசுகம், தொழில் விருத்தி, பணஆதாயம், தெய்வ உதவி.

மகரம்: காரியசித்தி, கலை வெற்றி, மனநிம்மதி, மாதரால் நன்மை, பணவரவு.

கும்பம்: பிடிவாதகுணத்தால் நல்லோர் பகை, பகைநீக்கம், மதிப்பு, வித்தைச்சிறப்பு, பணவரவு.

மீனம்: யோசனை, சஞ்சல புத்தி, வாக்குத்தடை, வித்தைகேடு, உடல்நலக்குறைவு, மறதி.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

A 40 "குட்ஸ் வான்" CN 5 ஆயிரம் தொடர்பிலக்கமுள்ளது நல்ல நிலைமையிலிருக்கிறது—விபரங்கட்கு P. பரமசிவம், 184, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலுக்கு அனுபவம் உள்ள கணக்கப்பிள்ளை ஒருவர் தேவை. வயசு 30க்குமேற்பட்டவராக இருக்கவேண்டும். மாசம் சம்பளம் ரூபா 150. ரூபா 500 ரொக்கப்பிணையும் ரூபா 1500 ஆதனப்பிணையும் கொடுக்கவேண்டும். விண்ணப்பங்கள் காரியதரிசிக்கு15-5-62ம் திகதிக்குமுன் அனுப்பிவைக்கவேண்டும். அத்துடன் 18-5-62 வெள்ளிக்கிழமை மு. ப. 11 மணிக்கு நயினாதீவு கோவில் மண்டபத்தில் நேர்முகப் பரீட்சைக்குநற்சாட்சிப் பத்திரங்களுடன் சமுகமளிக்கவேண்டும்.

கா. ஆறுமுகம்,
காரியதரிசி,
நாகபூஷணி அம்மன்கோவில்,
தர்மகர்த்தாசபை,
நயினாதீவு.


# "சைவத்தை சீர்திருத்துவது அழிவுக்கு அடிகோலும்"

## சைவ இளைஞர் மகாநாட்டில் வித்துவான் ஜகந்நாதன்

### பண்டிதமணிக்கு பாராட்டு

கீரிமலை, புதன்

'சைவம் புனருத்தாரணம் செய்யப்படக் கூடியதன்று. கடவுள் நிறைவுள்ளவர். ஆனல் நாம் குறைவுள்ளவர்கள். நாம் உயர்ந்த நிலைபெறச் சமயம் உதவுகின்றது. சமயத்தில் பொற்காலம் என்ருல் சமயகுரவர்கள் வாழ்ந்து காட்டிய காலம்தான்."

இவ்வாறு சேர். கந்தையா வைத்தியநாதன் நேற்று மாலை அகில இலங்கைச் சைவஇளைஞர் மத்திய மகாசபையின் 'கந்தபுராண போதனை' நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் 'சமூகத் தொண்டும் சமயத்தொண்டும் புரிய, திருக்கேதீச்சரம் தமிழ்மக்களுக்கு வாய்ப்பளிக்கின்றதென்றும் சரித்திர ஆராய்ச்சிகள் நமக்குச் சாதகமாகலாம் என்ற எண்ணத்தை திருக்கேதீச்சரம் எமக்கு ஏற்படுத்துகின்றதென்றும் திருக்கேதீச்சரம் பாடல்பெற்ற ஸ்தலமென்றும் பாவம் தீர்க்குமிடமென்றும் தமிழ் மக்கள் வாழ்க்கை உயர்ந்தபோது ஆலயங்கள் உயர்ந்தனவென்றும் இன்றுள்ள நிலையில் நாமனைவரும் சமூக சேவையில் ஈடுபட வேண்டுமென்றும், அப்போதுதான் நாம் உயர்ந்த வாழ்க்கையை எய்தலாம் என்றும் குறிப்பிட்டார்.

திரு. நம. சிவப்பிரகாசம் வரவேற்புரை நிகழ்த்தினர். சேர் கந்தையா வைத்தியநாதன் மகாநாட்டின் சார்பில் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளைக்குப் பொன்னடை போர்த்திக் கௌரவித்தார். பண்டிதமணி எழுதிய கந்தபுராண போதனை நூலை, சென்னை கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்துகையிற் குறிப்பிட்டதாவது:

#### சமயவாழ்க்கையில் வாழ்ந்து காட்டினர்

"நாம் சமயவாதிகளாக இருத்தல் கூடாது. சைவர்கள் சமயிகளாக இருத்தல் வேண்டும். அமைதியிலே வாழ்பவன் சமயி. மெய்யடியார்கள் இட்ட பிச்சைதான் சைவசித்தாந்தம். சமயவாழ்க்கையிலே அவர்கள் வாழ்ந்து காட்டினமையினலேயே அவர்களால் சமயநூல்கள் எழுதமுடிந்தன. மேலைநாட்டினர் வாழ்க்கைக்குச் சமயத்தைக் கொண்டுவருகின்றனர். ஆனல் நாமோ சமயத்திலே வாழ்கின்ருேம். நமது வாழ்க்கையிலிருந்து சமயம் பிரிக்கப்பட முடியாது. சமயவாழ்க்கை வேறு. சமயவாழ்வின் உச்சத்திலே பெறுகின்ற அனுபவம் வேறு.

புராணங்கள், கட்டுக்கதைகள், பைத்தியக்காரத்தனம் என்று சொல்பவர்கள் சமயநூல்களை எள்ளி நகையாடுகின்றனர். விஞ்ஞானி ஏதோ ஒன்று செய்யப் புகுந்து வேறென்று உருவாகுவதனைக் கண்டதும் எம்மைவிட ஆற்றல் கூடிய சக்தியுண்டு என்பதனை உணருகிறன். மனிதனுக்குப் பயன்படாத எதுவுமே நாட்டில் இருக்கக்கூடாது. நமது சமயத்துக்கு அடிப்படையாக வேதம் இருக்கின்றது. வேதம், ஸ்மிருதிகள், காப்பியம், புராணங்கள் என்பன சமயத்திற்கு உயிர்நாடியாக இருக்கின்றன. வேதம்சொன்னவற்றை மாற்ற எமக்கு உரிமையில்லை. தலைவன் வாக்கு வேதம். ஸ்மிருதிகள்நண்பனைப் போன்றது. இவை ஒழுக்க நூல்கள். காப்பியம் வேதம் சொன்னவற்றின் பொருளாக இருக்கின்றது. இது மனைவியைப் போன்றது. சொல்லழகு பொருள், கட்டுக்கோப்பு என்பன காப்பியங்களால் காணப்படுகின்றன. புராணங்கள் வேதத்தின் கருத்துக்களை வலுப்படுத்துகின்றன. இது குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகளைப் போன்றன. புராணங்கள் நம்பமுடியாதன என்று கூறுபவர்கள் 'ஈசாப்பு' என்பவரின் உவமைக்கதைகளை புகழுவதன் காரணம் என்ன? கருத்துக்காக என்று அவர்கள் சொல்லக்கூடும். அப்படியெனில் புராணங்களில் உள்ள கருத்துக்களையும் நாம் ஏன் உணரக்கூடாது? குழந்தைகளுக்கு இனிமையைச் செய்து உண்மையைச் சொல்வன புராணங்கள். வாழ்க்கையே சமயம் என்பனை உணர வேண்டும். புராணங்களினல் தெய்வபக்தி வளரும். எறும்பு, கழுதை, யானை, சிலந்தி என்பன இறைவனைப் பூஜித்தன என்ருல் இவற்றைப் பார்க்கும் போது நாமும் இறைவனின் தொடர்பை நினைவு கொள்ளக் கூடியதாகவுள்ளது. வேதாகமம் சைவத்தின் அடிப்படை. சைவத்தில் சீர்திருத்தம் செய்யப் போகின்ருர்கள் என்ருல் அது சமயத்தின் அழிவுப் பாதைக்கு வித்திடுவதாக இருக்கும். பண்டிதமணி எழுதிய கந்தபுராண போதனை சமயத்திற்கு வேண்டுவது. பண்டிதமணி பன்னிரண்டு கட்டுரைகளில் குறிப்பிட்டனவற்றை விளக்கப் பல புத்தகங்கள் எழுத வேண்டும். புலமையும், ஒழுக்க விழுப்பமும் உடைய பண்டிதமணி சைவத்திற்கு இன்னும் பல நூல்களை எழுதித்தர வேண்டும் என்று இந்திய அறிஞர்களின் சார்பாகவும் இலங்கை அன்பர்களின் வழக்கறிஞராக இருந்தும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

#### சமயபாடத் திட்டம் தரும் கஷ்டம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

கருத்துக்களை நிலை அறிந்து கூறவேண்டும். அளவு அறிந்து காரியங்களைப் பயன் படுத்துதல் முறை. சிவ சங்கர பண்டிதர் நாவலர் ஆகிய இரு பெரியோர்களும் அமரத்துவம் நிரம்பிய நூல்களைப் படைத்தனர். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் நாவலரைப் பாராட்டியிருக்கிருர். நாவலர் மிகுந்த கவனத்துடன் நூல்களை எழுதினர்.

சில சொற்றொடர்களை உபயோகித்தலில் போதிய கவனமெடுக்கவேண்டும். வேறுபட்ட பொருள்களைத் தரக்கூடிய சொற்களை உபயோகப் படுத்திப் பலரையும் சிரமத்துள்ளாக்குதல் கூடாது. இது நூல் செய்பவரின் கவனத்தில் எப்போதும் இருக்கவேண்டும். இங்கு நடந்த தமிழ் விழாவில் நான் ஒரு வார்த்தையைச் சொல்ல, ஏனையவர்கள் வேறு பொருள் கொண்டு என்னைச் சிரமப்படுத்திவிட்டனர்.

இன்று சமய பாடத்திட்டம் பல சிக்கல்களை உண்டாக்கியிருக்கிறது. சமய விளக்கம் தெரியாத பாடங்களில் ஆசிரியர்கள் கஷ்டப் படுத்தப்படுகின்றனர். குழந்தைகள் படிக்கக் கூடியதாகப் பாடப்புத்தகங்கள் இருக்கவேண்டும்.

#### நூல்கள் எழுத சமய அனுபவம்

புத்தகம் எழுதுவது தென்ருல் சுலபமானதல்ல, புத்தகம் எழுதுபவன் கண்டனத்தை நிச்சயமாக எதிர் பார்த்தேயிருக்கவேண்டும். சமய அனுபவமே நூல்கள் எழுத உதவக்கூடியன. இராமலிங்க அடிகளார் பல சிக்கலுற அவர் மாணவர்கள் காரணமாயிருந்தனராம். அதேபோல எனனுடைய மாணவர்களும், என்னை ஊக்குவிப்பதாகச் சொல்லுபவர்களைப் பார்த்து எனக்குச் சிரமந் தரமாட்டார்கள் என்பதே எனது நம்பிக்கை. நாவலரும் சிவசங்கர பண்டிதரும் நமது நாட்டுச் சைவமக்களின் இருகண்கள். அவர்கள் செய்த தொண்டுகளின் பயனை நாம் உணராமல் இருப்பது தவருனது.

உதவி வித்தியாதிபதி திரு. சோம சேகரம் பேசுகையில், கூறியதாவது:-

சமய பாடத்திட்டம் மாற்றப்பட்டு வருகிறது. அரசினர் சைவ மக்களின் கோரிக்கைக்கு இணங்கி, குழந்தைகளுக்கு இலகுவான பாடத்திட்டத்தை உருவாக்க முயலுகிருர்கள். விரைவில் இப்பாடத் திட்டம் அமுலுக்கு வந்து மக்களுக்கு நன்மை புரியும்,

சபைக் காரியதரிசி திரு. இரா. சண்முகரத்தினம் நன்றி கூறினர்.

அகில இலங்கைச் சைவஇளைஞர் மத்திய மகாசபையின் அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் இறுதி நிகழ்ச்சிகள் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றன. நீதிபதி தமது தலைமையுரையில் 'சமய நீதி வாழ்க்கையை உயர்த்தும் வகைகளை' எடுத்துக்கூறினர்.

பண்டிதர் திரு. வே. சங்கரப்பிள்ளை சங்கீத உபந்நியாசம் செய்தார். செல்வி நாகேஸ்வரி கந்தவனம் 'அன்பும் அருளும்' என்பது பற்றிப் பேசினர். செல்விகள் மு. சத்தியதேவி, செ. பரஞ்சோதி ஆகியோரின் இன்னிசைக் கச்சேரி, மாவை கொல்லங் கலட்டி அருள் நெறிக்கழக மாணவிகளின் தேவாரப் பஜனை, திரு. மூர்த்தி ஐயரின் வேய்ங்குழற் கச்சேரி என்பனவும் மகாநாட்டில் இடம் பெற்றன.

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு சமய பாடம் கட்டாயமாக்கப்பட வேண்டும். என்னும் தீர்மானம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

---

# ஆசிரியர் விஷயத்தில் அரசியல்வாதிகள் தலையீடு

## தடைசெய்யவேண்டுமென ஆசிரியர்சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்த காலத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கு இருந்த மொழியுரிமை தொடர்ந்தும் இருக்கவேண்டும். சிங்களம் படிக்கும்படி நிர்ப்பந்திக்கக் கூடாதென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ்த் தராதரப் பத்திர ஆசிரிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த வருடாந்தக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திரு. வி. சின்னத்தம்பி தலைமை வகித்தார். பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆசிரியர்கள் இடமாற்றம் பதவி உயர்வு வித்தியாபகுதியினரால் தாயரிக்கப்பட்டபின் வித்தியா பகுதிக் கூட்டுச்சபைக்குத் சமர்ப்பிக்கப்பட்டு ஆசிரிய தொழிற்சங்கங்களின் சம்மதத்துடன் நடைமுறைக்கு வருதல் வேண்டும். எந்த அரசியற் கட்சியிலுஞ் சேர்ந்த அரசினர் ஆசிரியர்களின் மாற்றம் உயர்ச்சி விஷயத்தில் அரசியல்வாதிகள் தலையீடு இல்லாதிருக்க வித்தியாதிபதி ஆவன செய்யவேண்டும்.

பாராளுமன்றத் தொகுதியடிப்படையில் ஜனநாயகத்துக்கு மாருக நடைபெறும் தமிழ் ஆசிரிய மாற்றம், உயர்ச்சி நடைபெறுவது தவிர்க்க வேண்டும்.

ஆசிரியர்களின் மாற்றச் சபை உத்தியோகத்தர்கள் குறைந்தது இரண்டு வருடத்துக்கு ஒருமுறை அப்பகுதியை விட்டு வேறுபிரிவுக்கு மாற்றப்படுவதில் நியாயம் உண்டென இச்சபை கருதுகிறது. ஆகவே நீண்டகாலச் சேவையுள்ளவர்கள் உடனயாக மாற்றப்பட வேண்டும்.

தமிழ் ஆசிரிய காலாசலைப் பிரவேசப் பரீட்சைவிஷயத்தில் பிற்போக்கு இடங்கள், சிறுபான்மைச் சலுகை முற்றிலும் அநீதியானது. எனவே அப்படிக்கொடுப்பதைபாராளுமன்ற உறுப்பினரிடமோ கட்சியின் உறுப்பினரிடமோ கொடுக்காதுவித்தியாதிபதியே தெரிவு செய்யவேண்டும்.

முதலாம் தராதரப் பத்திரத்துடன் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்று பயிற்சி பெற்று வெளியேறும் ஆசியர்களுக்கு பயிற்றப்பட்ட முதலாம் தராதரப்பத்திரம் கொடுக்கப்பட வேண்டும்.

#### புதுவருட நிர்வாகிகள்

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோ தெரிவு செய்யப்பட்டன.

போஷகர்.-திரு. வி. கந்தப்பு. தலைவர்:- திரு.வ. சின்னத்தம்பி உபதலைவர்கள்:- திரு. பொ. கிருஷ்ணபிள்ளை, திரு. க. முருகேசு, திரு. ஆ. அருளம்பலம் பொதுக்காரியதரிசி:- திரு. சி. செல்லத்துரை. உபகாரியதரிசி:- திரு. க. ச. கந்தவனம். 4 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

---

## குத்திக் கொலை

மொறவக்கை, புதன்

டங்கலை என்ற இடத்தைச் சேர்ந்த எம் ஹேமவர்த்தன, பணத்தகராறு காரணமாய் குத்திக் கொல்லப்பட்டார். மெண்டிஸ் என்பவர் இது சம்பந்தமாய் காவலில் வைக்கப்பட்டார்.

---

## பாகிஸ்தான் தேசிய சபை

ராவல்பிண்டி, மே 2

பாகிஸ்தானின் புதிய தேசிய சபையின் முதல் கூட்டம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## உங்கள் நோய்


குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல பவியாகளுக்கும் நற்சாட்சிப்த்திரக்திகளடங்கிய கற்றலோங் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணுநந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

# போர்ச்சுக்கீசிய காவற் கைதிகள் லிஸ்பனுக்கு திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

கராச்சி, மே 2

கோவா, டாமென் டையூ ஆகிய பகுதிகளில் காவற் கைதிகளாகவுள்ள 4300 போர்ச்சுக்கீஸிய சிப்பாய்களையும் அதிகாரிகளையும் லிஸ்பனுக்கு கராச்சி மார்க்கமாக அனுப்புவதற்கு உதவிசெய்ய பாகிஸ்தான் அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மனிதாபிமானம் காரணமாகவே இதற்கு பாகிஸ்தான் உதவி புரிவதாக பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்தது.

பம்பாயிலிருந்து போர்ச்சுக்கீஸிய காவற் கைதிகள் விமானத்தில் கராச்சிக்குக் கொண்டுவரப்படுவார்கள். விமான நிலையத்திலிருந்து இவர்கள் கராச்சி துறைமுகத்துக்கு பாகிஸ்தான் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் மேற்பார்வையுடன் கொண்டு செல்லப்பட்டு அங்கு வந்து நிற்கும் போர்ச்சுக்கீஸிய கப்பல்களில் ஏற்றப்படுவர். இன்று பம்பாயிலிருந்து இவர்கள் கரர்ச்சிக்குக் கொண்டுவரப்படுவார்கள். பம்பாயிலிருந்து கராச்சிக்கு வந்து அங்கிருந்து லிஸ்பனுக்குப்புறப்பட மொத்தம் பத்து நாட்களாகும்.

# லிஸ்பனில் சலசார் ஆட்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

## பலர் காயம்; மற்றும் பலர் கைது

லண்டன் மே. 2

போர்ச்சுக்கலில் டாக்டர் சல சாரின் ஆட்சியை எதிர்த்து போர்ச்சுக்கலின் தலைநகரான லிஸ்பனிலும் மற்ருெரு நகரத்திலும், நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலிசார் தீயணைப்புப் படைத் தண்ணீர்த் தாங்கிகளை உபயோகித்துத் தண்ணீர் ஊற்றினர். ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிசாருக்கும் ஏற்பட்ட மோதலில் பலர் காயமடைந்தனர்.

லிஸ்பன் நகரில் பெருந்தொகையான மாணவர்கள் "சலசார் வீழ்க" "நாங்கள் பட்டினியால் வாடுகிருேம்" என்று கோஷித்துக்கொண்டு சென்றனர். பொலிசார்மீது அவர்கள் கற்களை வீசினர்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் சம்பந்தமாக பலர் கைது செய்யப்பட்டனர்.

# ஜப்பானில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## மாணவர் பலர் காயம்

லண்டன், மே 2

நேற்று உலகின் பல இடங்களிலும் மேதினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. சில இடங்களில் குழப்பங்கள் நடைபெற்றதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

### ஜப்பானில் கைகலப்பு

ஜப்பானில் நடைபெற்றமேதினக் கொண்டாட்டங்களில் சுமார் 65லட்சம் தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் கலந்துகொண்டன. டோக்கியோவில் நடைபெற்ற கொண்டாட்டத்தில் மட்டும் 5 லட்சம் மக்களுக்கு அதிகமானேர் கலந்துகொண்டனர்.

ஜப்பானில் நடைபெற்ற மேனக் கொண்டாட்டங்கள் யாவும் பெரும்பாலும் அமெரிக்காவின் அணுசோதனையைக் கண்டிக்கும் அமெரிக்கஎதிர்ப்பு இயக்கமாகவே இருந்தன.

இடதுசாரி மாணவர்கள் சிலருக்கும் பொலிசாருக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் பலர் காயமடைந்தனர்.

ஆர் ஜன் டை ஞ வில் ஒரு பொலிஸ்காரர் கொல்லப்பட்டார்.

# ராஜ்சாகி ஜில்லாவில் துருப்புக்கள் நிலைகொண்டன

## கலக சேதம்பற்றி விபரம் வெளியாகவில்லை

டாக்கா, மே 2

கிழக்குப் பாகிஸ்தானில் ராஜ்சாகி என்ற இடத்தில் இனக் கலகம் எற்பட்டுள்ளதாக நேற்று முதல் தடவையாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இக்கலகத்தில் எத்தனைபேர் கொல்லப்பட்டனர், எத்தனை பேர் காயமடைந்தனர் என்ற விபரம் அறிவிக்கப்படவில்லை.

ராஜ்சாகி கலகத்தில் 7 பேர் கொல்லப்பட்டனர்; 13 பேர் காயமடைந்தனர் என்று பாகிஸ்தான் செய்தி ஸ்தாபனம் ஒன்று தெரிவித்தது.

ராஜ்சாகி ஜில்லாவுக்கு துருப்புக்கள் பெருமளவில் அவசரமாக அனுப்பப்பட்டுள்ளதுடன் ஜில்லா முழுவதிலும் துருபுக்கள் நிலைகொண்டுள்ளன.

மேற்கு வங்காளத்தில் மால்டாஎன்ற இடத்தில் நிகழ்ந்த சிறு சம்பவத்தை பாகிஸ்தான் பத்திரிகைகளும் ரேடியோவும் மிகைப்படுத்தியதால்தான் கிழக்குப் பாகிஸ்தானில் வகுப்புக் கலகம் மோசமான முறையில் தோன்றியுள்ளது என்று இந்திய அரசாங்க வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன. மால்டாவில் இப்பொழுது அமைதி நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ரேடியோ இன்றைய காலைச் செய்தியில் ராஜ்சாகி கலகம்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனல் மால்டாகலகத்துக்கு மேற்கு வங்காள அரசாங்கம் தூண்டிவிட்டதென்றும் கலகத்துக்கு மேற்கு வங்காள அரசாங்கமும் உடந்தை என்றும் கூறியது.

# ஈரான் முஸ்லிம் மதத்தலைவர்கள்

## ஐ. நா. அதிகாரிகளுக்கு தந்தி

நியுயோர்க், மே 2

ஐ. நா. பாதுகாப்புச் சபை இன்று கூடுகிறது. காஷ்மீர் பிரச்னைபற்றி இன்றைய கூட்டத்தில் விவாதம் ஆரம்பமாகும். பாகிஸ்தான் பிரதிநிதி சேர். ஸபருல்லாகான் பாகிஸ்தான் தரப்பில் இன்று தமது வாதத்தை ஆரம்பிப்பார். இவரது பேச்சு நாளைக்கும் தொடர்ந்து நடைபெறக்கூடும்.

காஷ்மீர் பிரச்னைக்கு விரைவாகவும் சுமுகமாகவும் தீர்வு காண வேண்டுமென்றும் காஷ்மீரிலுள்ள ஐந்து லட்சம் முஸ்லிம் மக்களுக்கும் நியாயம் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்றும் ஈரானிலிருந்து ஐந்து முஸ்லிம் மதத் தலைவர்கள் ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசிக்கும் பாதுகாப்புச் சபைத் தலைவருக்கும், ஐ. நா. சபைத் தலைவருக்கும் அனுப்பியுள்ள தந்தியில் கேட்டுள்ளனர்.

# இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி

## மாஸ்கோ செல்கிருர்

ஜாகர்த்தா, மே 2

சோவியத் யூனியனிடமிருந்து இந்தோனேஷியாவுக்கு வந்து சேரவேண்டிய ஆயுதங்களை துரிதப்படுத்துவதற்காக இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ மாஸ்கோ செல்லவிருக்கிருர். இத்தகவலை இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்னே தெரிவித்தார்.

# ரங்கூனில் புயல்

ரங்கூன், மே 2

ரங்கூனில் நேற்று சில மணி நேரம் கடும் புயல் வீசியது. பலர் காயமடைந்தனர். கட்டிடங்களும் வீடுகளும் சேதமடைந்தன.

# சுதந்திர தொழிற் சங்க இயக்கத்தை விரும்பவில்லை

## பிரதமர், தொழில் மந்திரிமீது கொல்வின் கண்டனம்

கொழும்பு, புதன்

**"மக்களை நசுக்கும் எந்த சக்தியையும் எதிர்க்க தொழிற் சங்கங்கள ஆயத்தமாகிக்கொள்ள வேண்டும்" என பிரைஸ் பார்க்கில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பேசிய டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறினர்.**

டாக்டர் சில்வா மேலும் கூறியதாவது:-

"தொழில் மந்திரியின் மே தினச் செய்தி இவ்வாறு கூறும்படி என்னை நிர்ப்பந்தித்தது. தொழில் மந்திரியும், அவரது சக மந்திரிகளும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொழிற் சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டதும், பிரதம மந்திரி அதற்குத் தலைமை வகித்ததும் அரசியல் கட்சிகளுடன் தொடர்பில்லாத வகையில் தொழிற் சங்கங்களை வளர்ப்பதற்குத் தானு?

அரசியல் வாதியும், ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவருமான பிரதம மந்திரி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொழிற் சங்க போஷகராய் இருப்பது தொழிற் சங்க இயக்கம் சுதந்திரமாகத் தொழிற்படச் செய்யவா?

எல். எஸ். எஸ். பி. யூனியன்களுக்கு விசேஷ சலுகை காட்டுமாறு அரசாங்க கார்ப்பரேஷன்களுக்கு உத்தியோகப் பற்றற்ற முறையில் தொழில் மந்திரி உத்தரவிட்டது தொழிற் சங்கத்தில் அரசியல் செல்வாக்கு இல்லாமல் செய்வதற்குத்தானு? பிரதமரும், தொழில் மந்திரியும், அவர்களைச் சேர்ந்தவர்களும் சுதந்திர தொழிற் சங்கங்களை விரும்பவில்லை. ஆனல் தங்களது தொழிலாளர் விரோத நடவடிக்கைக்குக் கீழ்ப்படியும் தொழிற் சங்கங்களே அவர்கள் விரும்புவது. இதுபோன்ற தொழிற் சங்கங்களுக்கு இலங்கையில் இடம் கிடையாது. தொழிலாள வகுப்பினர் தங்களை நன்கு உணர்வார்கள்."

திரு. பி. பாலா தம்பு பேசுகையில்; பிற்போக்கு சக்திகள் ராணுவச் சதி மூலம் அரசாங்கத்தை விழ்த்தி தொழிலாளரை நசுக்க முயன்றனர் என்றும் அதிர்ஷ்டவசமாக இது தோல்வியுற்றதென்றும், ஆயினும் பிற்போக்கு சக்திகளின் அபாயம் இன்னும் இருக்கவே செய்கிறதென்றும் கூறினர்.

# கிராம அழகுப் போட்டி

லண்டன். செவ்வாய்

சமீபத்தில் பிரிட்டனில் நடாத்தப்பட்ட கிராம அழகுப் போட்டியில் விலட்ஷயரிலுள்ள காஸில் சோம்பே என்னும் கிராமத்தை பிரிட்டிஷ் மக்கள் அதி அழகான கிராமமெனத் தெரிவு செய்துள்ளனர். இந்தப் போட்டியில் பிரிட்டனிலுள்ள சுமார் 300 கிராமங்கள் பங்குபற்றின. அழகிய கிராமத்தைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பிரிட்டிஷ் பொதுமக்களையே சார்ந்திருந்தது.

மில்டன் அபாஸ என்னும் கிராமம் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

# பகை நாகர் தலைமைக் காரியாலயம்

புதுடில்லி, மே 2

பகை நாகர்களின் தலைமை நிலையம் கைப்பற்றப்பட்டதாக கொஹிமாவிலிருந்து வந்த செய்தி யொன்று கூறுகிறது. தலைமை நிலையம் கைப்பற்றப்பட்டபோது அங்கிருந்த பகை நகர் தலைவர்கள் சிலர் ஓடிமறைந்து விட்டனராம். தலைமைக்காரியாலயத்தில் கைப்பற்றப்பட்ட தஸ்தாவேஜுகளிலிருந்து அவர்களுக்கு ஆயுதங்களின் பற்ருக்குறை மட்டுமன்றி உணவும், பணமும் கூட தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

# இமாசல பிரதேச தேர்தல் முடிவுகள்

புதுடில்லி, மே 2

இமாசல பிரதேச, சட்ட சபைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் 33 தொகுதிகளின் தேர்தல் முடிவு வெளியாகியுள்ளது. இவற்றில் 28 ஸ்தானங்கள் காங்கிரசுக்கும் 4 ஸ்தானங்கள் சுதந்திராக் கட்சிக்கும் ஒன்று கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கிடைத்துள்ளன.

# மீன்பிடியாளர் மே தின கொண்டாட்டம்

கொழும்பு, புதன்

முகத்துவாரத்தில் நூற்றுக்கணக்கான மீன்பிடிக்காரர்களும், ஸ்தல மக்களும் மே தினத்தைக் கொண்டாடினர்கள்.

# "சைவசமய ஆலயங்கள் புனிதமாக இருக்கவேண்டும்"

## சைவ இளைஞர் மகாநாட்டு இரண்டாம் நிகழ்ச்சிகள் விபரம்

கீரிமலை, புதன்

"சைவசமய ஆலயங்கள் புனிதமானவையாக இருத்தல் வேண்டும். ஆலயம் புனிதமாக இருந்தால்தான் உள்ளம் புனிதத்தன்மை அடையும். மற்றைச்சமய ஆலயங்களைப்பார்த்தாவது நமது ஆலயங்களைப் புனிதமானவையாக இருக்க வகைசெய்யவேண்டும். இதனை அப்பர் சுவாமிகள் செய்து காட்டினர். அவ்வழியிலே தொண்டாற்ற வேண்டும்"

இவ்வாறு அகில இலங்கைச் சைவமகாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமான போது தலைமை வகித்துப் பேசிய வழக்கறிஞர் திரு. இ. நம. சிவப்பிரகாசம் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:-

எமதுபாடசாலை, மடாலயம், ஆலயம் என்பன சமய வாழ்க்கை எவ்வாறு வாழ்தல் வேண்டும்? என்பதனை வலியுறுத்தவேண்டும். ஆலயம் தொழுவது எமது மரபு. தினந்தோறும் ஆலயம் செல்ல முடியாவிட்டாலும் வெள்ளிக்கிழமைகளிலாவது ஆலயம் செல்ல வேண்டும். சைவம் இதுதான் என்பது வரையறுக்கப்பட்டுள்ளது. சைவம் சிவத்துடன் தொடர்பு உடையது. சைவர்களின் சமயம் சைவசித்தாந்தம்தான் என்பதற்கையமில்லை தற்கால உயர்தர வகுப்புக்குரிய சமயபாடத் திட்டம் பிழையான அமைப்பு உடையது. சைவசமயத்தில் உள்ள எல்லாபபேதங்களும் இலங்கையில் இருப்பதாக அரசினர் கருதுகின்றனர். இப்போதுள்ள பாடத்திட்டம் நல்ல பயனைத்தரமாட்டாது. சைவப் பெரியார்கள் இப்போது இருப்பராகில் இப்பாடத்திட்டத்தைக் கண்டு கண்கலங்குவர். நமது சமயத்தைபபற்றிக் கூடச் சொல்லமுடியாத நிலையிலே நாம் வாழ்கின்ருேம். கல்விக்கழகங்கள் எப்படியிருப்பினும் கற்பிப்பவர்கள் நம்மவர். அவர்கள் வருங்கால மக்கள் நன்குவாழக்கூடிய முறையை உருவாக்கவேண்டும். சைவவாழ்வு ஆசிரியர்கள் வாழ்ந்துகாட்டுவதினல் மாணவர்கள் சைவ வாழ்வில் ஈடுபட உதவும். எத்தனையோ பெரியார்களின் தொண்டுகளைச் சைவ உலகம் மறந்து வருகிறது. காசிவாசி செந்திநாதையர் சிவசங்கரபண்டிதர் என்போர் எழுதிய உரை நடை நூல்கள் மலிவுப் பதிப்பாக வெளிவர வேண்டும். புராணபடன வகுப்புக்கள் பழைய முறையில் நடைபெற வேண்டும்.

காலையில் நகுலேஸ்வர ஆலயத்தில் விசேஷ ஆராதனைகள் நிகழ்ந்தபின் ஏட்டுச்சுவடிகள் மங்கள இசைமுழங்க தேவார இசை பண்ணிசைக்க ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன. திரு. கே. பி. ஹரன் திறப்புரை நிகழ்த்தி அகில இலங்கைச் சைவமகாநாட்டின் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளைத் தொடக்கிவைத்தார். பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை வரவேற்புப் பாடல்பாடி அனைவரையும் வரவேற்ருர். பண்டிதை பாலாம்பிகை தனபாலசிங்கம், திருமாமணிசிவம் ஆகியோர் பேசினர். திரு. வீரமணிஐயர் மகாநாட்டு வாழ்த்துப்பாடல் பாடினர்.

## மணி வாக்கு

ஒவ்வொரு மதத்தினரும் பிறமதத்தினரை வெறுக்காமல் பொறுத்துக் கொண்டும் கௌரவித்தும் வரவேண்டும். வேற்றுமைக்கிடையில் ஒற்றுமை வேண்டும்.

—மகாத்மா காந்தி


ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 20உ (3-5-62)


## அடையாளச் சீட்டு

இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் இனிப் போட்டோவுடன் கூடிய அடையாளச் சீட்டுகளை வைத்திருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தும் ஒரு புதிய மசோதா சென்ற வாரம் பார்லிமெண்டிலே கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த முறை இந்நாட்டிலுள்ள சகலரையுமே அறுதைகளாக்கும் அநாகரிக முறையென்றும், நாட்டுமக்கள் அனைவரையும் சந்தேகப் பேர்வழிகளாகச் செய்வதாகுமென்றும் இது கண்டிக்கப்பட வேண்டியதென்றும் யாழ்ப்பாண உதவிமேயர் திரு. துரைராசசிங்கம் ஒரு கூட்டத்தில் சரியாகக் குறிப்பிட்டார்.

சில வருடங்களுக்கு முன்பாகவும் இந்த யோசனை கூறப்பட்டது. இலங்கையிலே ஒரு குறிப்பிட்ட திகதியில் உள்ளவர்களுக்கெல்லாம் அடையாளச் சீட்டு அளிப்பதாயின் பின்னர் இங்கு சட்டவிரோதமாக வருபவர்களைப் பிடிக்கவும், வராமல் தடுக்கவும் முடியுமென்று நினைத்தனர். ஆனால் இதற்கு அதிக பணம் செலவாகுமென்ற காரணத்தால் இது கைவிடப்பட்டது. ஆனால் இப்போது, அரசாங்கம் செலவு செய்யாமல், ஒவ்வொருவரும் 3 போட்டோக்களைத் தங்கள் சொந்தச் செலவில் எடுத்து அனுப்ப வேண்டுமாம். மூன்று படங்களுக்கு ஒன்றரை ரூபாய் செலுத்தினால் போதுமென்றும் அதற்குமேல் செலவு செய்ய வேண்டாமென்றும் அறிவிக்கப்பட்டது. இப்போது நாட்டிலே ஒரு கோடிப் பேருக்கு மேலுள்ளனர். ஒவ்வொருவரும் போட்டோ எடுப்பதாயின் இதற்கு மட்டும் பொது மக்களுக்கு ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். ஏழ்மைப்பட்ட பெரிய குடும்பத்தாருக்கு இது பெரிய பளுவும் இம்சையுமாகும். பொது மக்களின் அதிருப்திக்கும் அரசாங்கம் இதனால் தன்னை உட்படுத்திக் கொண்டதாக முடியும்.

தென்னாபிரிக்காவிலே அடையாளச் சீட்டு முறை மனிதாபிமானமற்ற முறையில் அமுல் நடப்பதையும், இதனால் பலர் கொடுமைப்படுத்தப்படுவதையும் பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். அடையாளச் சீட்டில்லாமல் தம்வீட்டிலிருந்து சமீபத்திலுள்ள ஒரு கடைக்குச் சென்ற ஓர் ஆபிரிக்கரை ஒரு பொலீஸ்காரன் தம் பூட்ஸ் காலால் உதைத்தே கொன்றாராம்! இச்செய்தியைக் கேட்கையில், தென்னாபிரிக்கா கையாளும் இந்த மனிதாபிமானமற்ற முறையை இலங்கையிலும் எக்காரணம்பற்றியும் நாம் பின்பற்றுவது தகாதென்றே தோன்றும்.

அடையாளச் சீட்டுக்களை, சிறப்பாக ஏழைகள் பத்திரமாக வைத்திருப்பதுமிக சங்கடம். அவை காணமற்போய் விட்டால், அக்குடும்பத்தினர் பல சங்கடங்களுக்குள்ளாக நேரிடலாம். கள்ளக்குடியேற்றத்தைத் தடுப்பதற்காக இம் மசோதா என்று கூறப்படுகிறது. ஆனால் பல ஊழல்கள் புகுந்து இதனால் பல இலங்கையருக்கும் சிறப்பாகத்தமிழருக்குமே அதிக சங்கடங்கள் ஏற்படக்கூடும். கள்ளக்குடியேற்றத்தைத் தடுக்க வேண்டியது தான். அதற்காக இலங்கையிலுள்ள பொதுமக்கள் அனைவரையும் சந்தேகித்து, அவர்களை எல்லாம் அடையாளச் சீட்டு வைத்துக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவது சரியாகாது. இதுபற்றி அரசாங்கம் புனராலோசனை செய்து, இம்மசோதாவை உடன் வாபஸ்பெற வேண்டும்.

# மனத்திலும் இதயத்திலுமே தேசியஒற்றுமையைஉருவாக்கலாம்

(திரு. வில்மட் பெரேரா)

**'தேசிய ஒற்றுமை' என்ற பொருளில், அண்மையில் கொழும்பு முஸ்லிம் கலாசார இல்லத்தில், திரு. ஏ. வில்மட் பெரேரா நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.**

"தேசிய ஒற்றுமை" என்ற பொருள் எமது நாட்டின் இன்றைய சரித்திரத்தில் ஒரு பிரச்சினை மிக்க அம்சமாக விருக்கிறது. இப் பொருள்பற்றி நாம் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகின்றது.

நாளுக்கு நாள் ஏற்படும் பிரச்சினைகளில் அமிழ்ந்திவிடுவதினால் எமது நாட்டை எதிர்நோக்கி நிற்கும் பெரிய பிரச்சினைகளை நாம் மறந்து விடுவதுண்டு.

'தேசிய ஒற்றுமை' எமக்கு ஏன் தேவைப்படுகின்றது? ஒரு கோடிக்கும் குறைவான மக்கள் செறிவைக் கொண்ட நமது நாடு மிகவும் சிறியது. ஆனால், வெவ்வேறு சாதியினரையும், சமயத்தவரையும், வெவ்வேறு பண்பாடுகளையும் கொண்டுள்ளது எமது நாடு எமதுநாட்டின் நீண்ட சரித்திர காலபபகுதிகளில் வெவ்வேறு சாதி மக்கள் வந்து இங்கு குடியேறினர்.

எமது மிகப்பழைய சரித்திரம் மங்கலானதாகவும் இருளடைந்ததாகவும் இருக்கின்றது. அக்காலத்தில எமக்குச்சமீபத்திலுள்ள இந்தியாவின் ஒரு பகுதியாகவேஎமதுநாடு இருந்ததாம். ஒரு சில மைல்கள் தூரமுள்ள சமுத்திரமே இரு நாடுகளையும் பிரித்துள்ளது.

### சுதந்திர நாட்டில் இனப் பிளவுகள்

எம்மிடையே பல நூற்றுண்டுகளாகவெவ்வேறுமொழிகளும், சமயங்களும் சாதிகளும் இருந்துவந்துள்ளன. இந்த வித்தியாசங்கள் காரணமாக எழுந்த பிரச்சினைகள் பற்றிக் கடந்த சில வருடங்களாக அதிகம் பேசப்பட்டுவருகின்றன. மலை நாட்டவரா, கீழை நாட்டவரா என்ற வித்திாசங்கள் சிங்களவரிடையேயும்; மட்டக்களப்புத் தமிழரா, யாழ்ப்பாணத் தமிழரா, இந்தியத் தமிழரா என்ற பாகுபாடு தமிழரிடையேயும், முஸ்லிம்கள், சோனகர்என்றவேற்றுமைமுஸ்லிம் மக்களிடையேயும், மேலும் பாராட்டப்பப்பட்டு வருகின்றன. இலங்கை சுதந்திரமடையு முன்னர் இப்பேற்பட்ட வித்தியாசங்கள் பாராட்டப்படவில்லை. எம்மிடையே உள்ள வெவ்வேறு சமுக மக்களினது தலைவர்களும் ஒன்று சேர்ந்து எம்மை ஆட்சிசெய்த பிறரிடமிருந்து எமது நலன்களைப் பாதுகாக்க முயன்றனர்.

எல்லோரும் ஒன்றுசேர்ந்து மேற்கொள்ளவேண்டிய முயற்சி அப்போது இருந்தது. அந்த முயற்சியால் பெறவேண்டியதைப் பெற்றதும் எம்மிடையே பிளவுபட அரம்பித்து விட்டோம்.

உலகம் நாளுக்கு நாள் குறுகிக்கொண்டே வருகிறதெனலாம். வெளிநாடுகளில் எத்தனையோ மகத்தான மாற்றங்கள் ஏட்பட்டுவருன்றன. இந்த மாற்றங்களின் பிரதிபலிப்புக்களை இந்தச் சிறிய நாட்டிலுள்ள நாமே உணர முடிகிறது. இத்தகைய மாற்றங்கள் உலக அரங்கில் ஏற்படும் ஒரு காலத்தில் எம்மிடையே பெருகிவரும் இனப் பிளவுகள் தெற்றெனப் புலனாகின்றன.

### மோசமான பொருளாதார நிலை

எமது பொருளாதாரநிலை மிகவும் பின்தங்கியதொன்றாகும். உலகத்திலேயே நமது சனப்பெருக்கவிகிதம் பெரிய தொன்றாகும். பொருள் உற்பத்தி அதிகரிப்பதாகவில்லை. இந்த நிலை மிக்க மோசமான ஒரு நிலை. பொருளாதாரத்தைப் பெருக்கும் முயற்சிகளில் சகல இன மக்களின் உழைப்பையும், ஊக்கத்தையும் நாம் உபயோகப்படுத்தவேண்டும் இதைச் சாதிப்பதற்கு நாட்டிலுள்ள ஆண்கள் பெண்கள் குழந்தைகள் யாவரையும் ஜாதி மத பேதமின்றி ஒன்றுசேர்க்க வேண்டும்.

இதை எவ்வாறு நாம் சாதிக்க முடியும்?

எமது பழைய பரம்பரைப் பழக்கத்தை நினைவுபடுத்திப் பார்ப்போம். குறிக்கப்பட்ட ஒரு சாதியையோ அல்லது சமயத்தையோ சேர்ந்தவர் என்ற பிரச்சினை ஒருகாலத்திலும் எழவில்லை. நாம் எல்லோரும் இங்கு வாழவேண்டும், நல்லுறவுடன் எல்லோருக்குமே இடம் வழங்கவேண்டும் என்ற பண்பாடே பளையகாலத்தில் எம்மிடையே நிலவிவந்தது.

### சமயத்தின் முக்கியம்

எமது பௌத்த கோயில்களைப் பார்த்தாலே இது புலனாகும்.

சமய கோட்பாடுகளையும் அரசியல் தருமங்களையும் நாம் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாகிறது. பிள்ளைகளுக்கு சமயபாடம் கற்பிப்பதில் இன்று பள்ளிக்கூடங்கள் பெருமுயற்சி யெடுத்துவருகின்றன. இந்தப் பொறுப்பைக் கோவில்களே செய்துவந்தால் நன்மையல்லவா?

### மொழிப் பிளவு

புத்தியினால் அறிந்துகொண்டு பரீட்சைகளில் தேர்ச்சி பெறுவது மட்டும் கல்வியல்ல. பிள்ளைகளை உணரவைத்து சிந்திக்கச் செய்வதே சரியான கல்வியாகும். இந்தக் கட்டத்தில் தான் மொழிக் கல்வி பற்றி நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியவர்களாகிறோம். மொழி அடிப்படையில் பிள்ளைகளையும் அவர்களது கல்வியையும் தரம்பிரித்துக் காட்டுவது சரியான முறையல்ல.

வெவ்வேறு மக்களை ஒன்று சேர்த்து ஒருமைப்படுத்துவதற்கும். தேசிய ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும், கல்வி முறைதான் தக்க ஆயுதமாக விருக்கலாம்.

கடந்த சில வருடங்களில் வேறு எதனிலும் பார்க்க 'மொழி' எம்மிடையே பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளது. அரசகரும மொழி என்ற விஷயம் தலைகாட்டமுன்னர் நாமெல்லோரும் அதிக ஒற்றுமையாக வாழ்ந்தோம். சிங்கள மொழி அரசகரும மொழியாக்கப்பட்டதும், ஏனைய மொழி பேசும் மக்கள், தமது வாய்ப்புக்களைத் தாம் இழந்துவிடலாம் என்ற பீதியினால். கிளர்ச்சியுற்றனர். இந்த உணர்ச்சி இன்றும் நிலவிவருகிறது. இந்த மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளார்கள்.

ஒரு இனத்தவா, இன்னுமொரு இனத்தவர்மீது தம்முடைய மொழியையோ சமயத்தையோ திணித்துவிட முடியாது என்று நான் எப்பொழுதுமே கருதிவந்துள்ளேன். குறிப்பிட்ட மாற்றங்களுக்கு சிங்கள மொழியல்லாத ஏனைய மொழி பேசும் மக்களின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ள இயலாமற்போனது துர்அதிர்ஷ்டமே. நாட்டின் கருமங்கள் மக்களின் மொழிகளில்தான் நடாத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை எழத்தான் செய்தது. இது இயற்கையாகவே நிகழவேண்டியதுதான். அதற்காக, சிறுபான்மை மக்களின் மொழிகளுக்கு பெரும்பான்மையினர் மதிப்புக்கொடுக்கவேண்டியதில்லை என்று சொல்வதற்கில்லை. காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அரசாங்கம் தனிச் சிங்கள மசோதாவுக்குக் காரணமாகவிருந்தது. முற்போக்கு வாதியான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் நோக்கம் அதுவாக இருக்காது என்பது எனனுடைய அபிப்பிராயம்.

இந்தியாவை எடுத்துப் பாருங்கள். ஹிந்தி மொழியே அரசகருமமொழி எனக் கடந்த 15 வருடங்களாக மதிக்கப் பட்டுவருகிறது. எனினும் ஆங்கில மொழியையும் அரசகரும மொழியாக்க இந்தியா தீர்மானித்துள்ளது.

### ஏமாற்ற உணர்ச்சி

சிங்களவரல்லாத ஏனைய மக்களிடையே நிலவி வரும் ஏமாற்ற உணர்ச்சி நீக்கப்படல் வேண்டும். சிங்கள மொழியை அரசகருமமொழியாக உடயோகப்படுத்துவதோடு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் சிங்களத்தின் இணை மொழிகளாக்குவது பொருத்தமான செய்கையாகும் என்பது என்னுடைய கருத்து. தேசிய ஒற்றுமைக்கும் இது வித்திடுவது போலாகும். ஒவ்வொரு மனிதனும் பிற மனிதனின் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுப்பானேயானால், சகலரது உரிமைகளும் பாதுகாக்கப்படும்.

### இலங்கை இந்திய பிரச்சினை

மேலும் ஒரு பிரச்சினை எம்மை எதிர் நோக்கியுள்ளது. அதுதான் இலங்கை-இந்தியப் பிரச்சினை. சமார் 25

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

பத்துவருடங்களுக்கு முன்பாகக் கொழும்புக் கலாலயத்திலே ஒரு நடனக் கச்சேரி நடைபெற்றது. "ஏறுமயில் ஏறி விளையாடும் முகம்ஒன்றே" என்ற பாட்டுக்கிசைய, ஆறு குழந்தைகள் ஆறுமுகமான பொருளாக வந்து, ஒவ்வொருவரும் அழகாக அபிநயம் பிடித்துச்சென்றனர். அதிலே ஏழு வயதுள்ள ஒரு முருகன், ஈசருடன் ஞானமொழி பேசினன். அழகு கொஞ்சியது. மறக்கவே முடியவில்லை.

நேற்று முன்தினம் அதே "முருகன்" யாழ்ப்பாணம் நகர மண்டபத்திலே, திருக்கேதீச்சரம் திருப்பணிக்காக, பரத நாட்டியமாடினர்! என்ன புதிர் போடுவதாக நினைக்கிறீர்களா? செல்வி சாந்தா ரமணி, கலாலயத்திலே சில வருடங்கள் நடனம் கற்று, பின்னர் சென்னை கலாக்ஷேத்திரத்தில் பரதம் பயின்றாராம். இப்போது இலங்கை திரும்பி, கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் அரங்கேற்றம் செய்து கேதீச்சரநாதனுக்குக் காணிக்கை செலுத்தி, அவரது அருளையும், மக்களின் ஆசியையும் அமோகமாகப் பெற்றார்.

மண்டபத்தில் நல்ல கூட்டம். அன்றுபார்த்த குழந்தைதான் இப்போது பரதமாடுவதாக எனக்குத் தெரியாது. சாந்தாவுடன் நடனக்கலையும் அழகாக வளர்ந்துள்ளது. டான்ஸ் கனகச்சிதம். பாடிய பாட்டுக்களில் ஒன்றைத்தவிர மற்றவையெல்லாம் சம்ஸ்கிருதமும், தெலுங்கும்தான். ஒன்றும் புரியாவிட்டாலும் கைகளும், கால்களும், பேசி அலுப்புத் தட்டாமல், மக்களைக் கவர்ந்துவிட்டன. சென்னை கலாக்ஷேத்திரத்திலிருந்துவந்த பின்னணி கோஷ்டியின் இசை, இனிமையாயும் நடனத்துக்கேற்ப கச்சிதமாகவுமிருந்தது. ஈழத்திலே நம் அருங்கலைகள் அழகாக வளர்ந்து வருவதை நேரில் காண முடிந்தது.

இனி இக்கலைகளைக் கற்க சென்னைக்கு நம் குழந்தைகள் செல்லமுடியாமல் அரசாங்கம் தடுத்துள்ளதுபற்றி நன்றி கூறிய அன்பர் அம்பிகைபாகன் வருந்தினர். ஆனல் அங்கு பல வருடங்கள் கலையைக் கற்றுவந்துள்ள பல பெண்மணிகள் இங்கு அதே கலையைப்பலருக்கும் கற்பித்துவருவது ஓரளவு ஆறுதலளிக்கின்றது.

* * *

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் இன்று காலை சென்னைக்கு விமான மூலம் பறந்து செல்லுகிறார். நேற்று அவர் ஆபீஸுக்கு வந்துசிறிது நேரம் அளவளாவினர். அதற்குள்ளாக எவ்வளவு சிலேடை, எவ்வளவு தமாஷ்!

முத்துவேல் என்ற அன்பருக்கு வித்துவான்மீது மிக அன்பு. கந்தோரில் லீவும் எடுத்துக் கொண்டு தம துகாரிலேயே கி. வா. ஜ.வை ஏற்றிக் கொண்டு பல இடங்களுக்கும் சுற்றுவாராம். அவருக்கு 'பார்த்தசாரதி' என்று பெயரிட்ட வித்துவான், "கிருஷ்ணனே நான் பாக்காத சாரதி ஆனல் நான் பார்த்த சாரதி நீங்கள்தான்!" என்றாராம்.

ஒரு சமயம் அன்பர் முத்துவேல், ஒரு வீட்டிலே வாங்கில் அமர்ந்திராராம். சற்று நேரமாக கதிரைவேலாகஇருக்கப்படாதா? என்று கதிரையைக் காட்டினாராம் வித்துவான். கேட்கக் கேட்க ஒரே சிரிப்புத்தான்.

* * *

இட்டிலிக்கும் சிவபெருமானுக்கும் சிலேடையாக ஒரு பாட்டுப் பாடும்படி கேட்டனராம். உடன் கீழ்க்கண்ட பாடலை எழுதிவிட்டார்.

"ஆட்டியபின் ஆவியிலே
பக்குவங்கண்டங் கெடுக்கும்
ஈட்டால் பொடி வெண்மை
ஏய்தரலால்-போட்ட இலை
மேலுறலால் சாம்பாரின்

(5-ம் பக்கம் பார்க்க)

# "அரசாங்கம் தன் சோஷலிஸ வழியை மாற்றுது"

## லங்கா சமசமாஜக் கட்சிக்கு பிரதமர் பதில்

கொழும்பு, புதன்

**மக்களால் நிராகரிக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சின் சோஷலிஸ்ட் கொள்கையை கைவிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான சோஷலிஸ்ட் வழியைப் பின்பற்றுமாறு லங்கா சமசமாஜக் கட்சியை பிரதமர் கேட்டுக் கொண்டார்.**

"அரசாங்கம் தனது தற்போதைய சோஷலிஸ்ட் கொள்கையைக் கைவிட்டு உண்மையான சோஷலிஸ்ட் கொள்கையைப் பின்பற்றுமாறு மேதினக் கூட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சி ஒரு தீர்மானம் சமர்ப்பித்திருப்பது பற்றிக் குறிப்பிடுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினர்".

"காலஞ்சென்ற பிரதமரின் கொள்கைப்படி நாட்டை அபிவிருத்திசெய்யும் பொருட்டு இந்த அரசாங்கத்தை மக்கள் தெரிவு செய்திருக்கின்றனர். எனவே எந்த அரசியல் கட்சியின் கோரிக்கைக்கிணங்கவும் அரசாங்கம் தன் கொள்கைகளை மாற்றிக்கொள்ளாது" எனவும் பிரதமர் கூறினர்.

"தொழிலாளர்கள் பிற்போக்குச்சக்திகளுக் கெதிராகவும், இதர முட்டுக்கட்டைகளுக் கெதிராகவும் போராடி வறுமையிலிருந்து விடுபடும் ஒரு சோஷலிஸ்ட் அரசாங்கத்தை அமைக்கும் பாதையில் முன்னேற உறுதிகொள்ள வேண்டும். அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பு அளிப்பது மூலமே இதைச் செய்யமுடியும். 1956-ம் ஆண்டு ஆரம்பமான போராட்டத்தை தொடர்ந்து நடத்தி ஊழலையும் வறுமையையும் ஒழிக்கவேண்டும்.

சதித்திட்டம் வெற்றியடைந்திருந்தால் மக்கள் மீண்டும் அடிமைகளாய் இருப்பார்கள். டாக்டர் டபிள்யு. டி. டி' சில்வா கட்சியை விட்டு விலகிய பின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்கத்துக்கு பலத்த அடி விழுந்தது. அங்கச்சேதம் இப்போது சீர்ப்படுத்தப்பட்டு விட்டது" என்றும் பிரதமர் கூறினர்.

திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டார நாயக்கா பேசுகையில், தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கவும், அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது என்றும், அரசாங்கத்தில் குறைபாடு இருக்கக்கூடுமாயினும் அடுத்த ஆண்டு இது சீர்திருத்தப்படும் என்றும் கூறினர்.

# அக்காளைப் பிரிந்த தங்கை தற்கொலை

டிக்வெல, புதன்

டிக்வெலைத் தோட்டத்தைச் சேர்ந்த செல்லம்மா, என்னும் 18 வயதுப் பெண் தன்மீது தீப்பற்றவைத்துக் கொண்டு தற்கொலை செய்துகொண்டார்.

இவரது மரணவிசாரணையின் போது சில காலத்துக்கு முன்னர் இவரது சகோதரியான பாக்கியம் (வயது 24) என்பவர் மரணமானர். என்றும் சகோதரியை இழந்த கவலை தாங்கமுடியாது செல்லம்மா தற்கொலை செய்து கொண்டார் எனவும் தெரிய வந்தது. மரண விசாரணை முடிவில் தற்கொலைஎனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மரணமானவரின் சகோதரியாகிய பாய்க்கியம் தீவிபத்தொன்றில் அகப்பட்டு மரணமானராம். சகோதரியின் மறைவைத் தாங்கமுடியாது செல்லம்மா தனக்குத் தீவைத்துக் கொண்டு தம்மை மாய்த்துக் கொண்டார்.

தீயை அணைக்கத் தாம் பெரிதும் முயன்றதாகவும், ஆனல் முயற்சிகள் வீணயிற்றென்றும் செல்லம்மாவின் தந்தையார் மரணவிசாரணையின் போது சாட்சியமளிக்கையில் கூறினர்.

# "பிற்போக்கு சக்திகளை நசுக்கும் வேலையில் இடதுசாரிக் கட்சிகள் ஒன்றுபடவேண்டும்"

பீட்டர் கெனமன்

கொழும்பு, புதன்

**"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஐக்கியமுன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன ஒன்று சேர்ந்து இராணுவச்சதிக்குப் பின்னலிருக்கும் அரசியல், சமுக பிற்போக்கு சக்திகளை நசுக்கி, மக்களின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க வழி காண வேண்டும்" என கம்யூனிஸ்ட் கட்சியின் மேதினக்கூட்டத்தில் திரு. பீட்டர்கெனமன் கூறினர்.**

ஸ்ரீ. சுதந்திரக்கட்சிக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்குமிடையே ஏற்பட்ட ஒற்றுமை 1960 ஜூலையில் பிற்போக்கு இயக்கத்தைத் தோற்கடித்தது. தேர்தல் காலத்தில் மட்டும் தான் இவ்வித ஒற்றுமை வேண்டும் என்பது சரியல்ல. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாய் இருக்கும் வெளிநாட்டு, உள்நாட்டு சக்திகளை ஒழிக்கவும் இந்த ஒற்றுமை அவசியம். அடுத்த சிம்மாசனப் பிரசங்கத்துக்கு முன் அரசாங்கம் இடதுசாரிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு பொதுத் திட்டத்தை வகுக்க வேண்டும். சதியின் அரசியல் அம்சம் பற்றி ஒரு விசாரணை நடத்த வேண்டும். ராணுவம், பொலிஸ் அரசாங்கத்துறையில் உயர்தர அந்தஸ்திலுள்ள பிற்போக்குவாதிகளை அகற்றவேண்டும். "கத்தோலிக்க நடவடிக்கை" பற்றி ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும். வெளிநாட்டு வங்கிகளும், வெளிநாட்டு இறக்குமதி ஏற்றுமதி வகைகளும் தேசியமயமாக்கப்பட வேண்டும்" எனவும் திரு. பீட்டர் கூறினர்.

# மனத்தினலும். . .

(4ம பக்கத் தொடர்ச்சி)

வருடங்களாக இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடப்படுகிறது.

இப்பிரச்சினையை, முழுவதும் புதிதாகவே இப்போது ஆராய்வது நல்லது. மூன்ருவது தடவையாக ஸ்ரீ நேரு பிரதமராகியுள்ளார். மனித உரிமையின் அடிப்படையில் எமது பிரதமருக்கும் அவருக்குமிடையே நிலவிவரும் நல்லுறவும் நல்லெண்ணமும், இப்பிரச்சினைக்குப் பரிகாரம் தேடப் பெரிதும் உதவலாம்.

தேசிய ஒற்றுமையை சிமெந்தோ, சுண்ணும்போ கொண்டு கட்டியெழுப்ப முடியாது. மனிதனின் மனத்திலும் இதயத்திலுமிருந்து அது உருவாக வேண்டும். சகல மனிதருஞ் சகோதரர் என்ற தர்மத்தின் அடிப்படையிலேயே நாம் வளர்ந்துள்ளோம்எம்மைப்பிளவுஏற்படுத்தும் முட்டுக்கட்டைகளை நாம் தகர்த்தெறிய வேண்டும். ஒரு காலத்தில் நாம் ஒன்ருக வேலை செய்தோம். ஒன்ருக வாழ்ந்தோம் என்பதை இப்போது நாம் நினைவுபடுத்திக்கொள்வோம். இந்த மனப்பான்மையுடன் ஒன்றுபட்ட இலங்கையை நாம் ஏற்படுத்துவோம்.

# சர்வகலாசாலை, ரஸ்தா - பராமரிப்பு மான்யம் வெட்டு

## அரசாங்க நிதிநிலைமையே காரணம்

கொழும்பு, புதன்

அடுத்த நிதி ஆண்டில் ரஸ்தா பராமரிப்பு சம்பந்தமான மராமத்து இலாகா நிதியில் சுமார் 8 லட்சம் ரூபாயை திறைசேரி வெட்டிவிட்டது.

அரசாங்க நிதி நிலைமை இடமளிக்காததால் புதிய ரஸ்தா அமைப்புக்காக அனுமதிக்கப்பட்ட பணத்திலும் சுமார் 50 லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. ரஸ்தாக்கள் ப்ழுது பார்க்கப்படாமல் தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வருவதால், இன்னும்சில ஆண்டுகளில் அதன் பராமரிப்புச்செலவு மேலும் அதிகரிக்கும். சீர்கெட்ட ரஸ்தாக்களை உபயோகிப்பதால் வாகன விபத்துக்களும் அதிகரிக்க இடமுண்டு.

கண்டிப்பகுதியில் ரூ. 35 லட்சம் செலவில் மராமத்து இலாகா ரஸ்தாக்களை அமைக்கவிருக்கிறது. யாழ்ப்பாணத்துடன் வடகரையை இணைக்கும் பொருட்டு 60 மைல் நீள ரஸ்தா போடப்படும்.

### சர்வகலாசாலைக்கும் பணவெட்டு

1962 - 63-ம் ஆண்டு பட்ஜட்டில் சர்வகலாசாலைக்கு 90 லட்சம் ரூபாய்க்கு மேல் கிடைக்காதென கல்வி அமைச்சு, சர்வகலாசாலைக்கு அறிவித்திருக்கிறது. சர்வகலாசாலை கோரிய தொகையிலிருந்து 40 லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

இந்தப் பணவெட்டு நாட்டின் நிதி நிலைமையில் தவிர்க்க முடியாதவை என்றும் சர்வகலாசாலை வட்டாரங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனல் சர்வகலாசாலை மான்யம் அதே போல் இருக்கிறதெனவும், இதுவும் கூட போதாது எனவும் கூறப்படுகிறது.

# மண்பாண்டத் தொழிலாளர் கஷ்டநிலை

வென்னப்புவா, புதன்

வென்னப்புவாத் தொகுதியில் சுமார் 1006 பேர் மட்பாண்ட உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு வருகிறர்கள். இத் தொழிலாளர்கள் வீடில்லாமலும், காணிநிலமில்லாமலும், தமது தொழிலுக்குத் தேவையான நவீன சாதனங்களில்லாமலும் பெரிதும் கஷ்டப்பட்டு வருகிறர்கள். தொகுதியின் பல பகுதிகளிலும் இத்தொழிலாளர் காணப்படுகின்றனர். இவர்களை வறுமை வாட்டுகிறது. காணிகள் வாங்கி வீடுகட்டுவதற்கு இவர்களது தொழில் இவர்களுக்குப் போதிய வருமானம் தேடிக்கொடுப்பதில்லை. வேறு மக்களின் காணி நிலங்களில் தங்கியிருந்தே இவர்கள் மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வருகிறர்கள். கிரிமெட்டியாவப் பகுதியில் இத் தொழிலாளர் குடும்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவர்களுக்கு இடநெருக்கடி அதிகமாகையால் இவர்களது சுகாதார நிலைமையும் குன்றி வருவதாகத் தெரிகிறது.

பொலவத்தா, மினிசங்சொட்டுவாப் பகுதிகளிலுள்ள தொழிலாளருக்கான புனரமைப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு சில பகுதிகளில் நிரந்தரமான வீடுகளும் தொழிலாளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன.

# பொது ஜன சுகாதார விழா

தெல்லிப்பழை, புதன்

வலிகாமம் வடக்கு பொது ஜன சுகாதார விழா அடுத்த மாதம் நாலாம் திகதியிலிருந்து பதினேராம் திகதி வரை கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்படுகின்றன. சுகாதார இலாகா இம் முறை சுகாதார விழாவை பொது ஜன சுகாதார விழாவாக மாற்றியுள்ளது. பொது ஜன சுகாதார விழா நடத்தப்பட வேண்டிய ஸ்தானமாக மல்லாகம் இந்துக்கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது. பொருட்காட்சி, சினிமாக்காட்சி, கதம்பக்கச்சேரி இன்னிசைக் கச்சேரி என்பன நடத்தப்படவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளை டாக்டர் ஜே. சி. துரைசிங்கம் கவனித்து வருகிறர்.

# வானவெளி ஆராய்ச்சியை கெடுத்துவிடும்

லட்டன் மே 2

பூமிக்குமேல் 500 மைல் உயரத்தில் அமெரிக்கா அதிகசக்தி வாய்ந்த மூன்று குண்டுகளை ஜூன் ஜூலை மாதங்களில் வெடித்து பரீட்சை செய்யவிருக்குந் திட்டத்தை பிரிட்டனிலுள்ள ஜோர்டல் பாங்க் வான ஆராய்ச்சி நிலையத்தின் டைரக்டர் கண்டித்தார். இந்தப் பரீட்சை சந்திரமண்டலப் பிரயாண முயற்சிகளையும் வானவெளிப் பிரயாண ஆராய்ச்சிகளையும் கெடுத்துவிடும் என்று அவர் தெரிவித்தார்.

# சுபீட்ச வாழ்வுக்கு பொருளாதார விருத்தியே காரணம்

## வவனியா மாவட்ட கமத்தொழில் விழாவில் உரை

வவனியா, புதன்

"ஓர் நாட்டின் சுபீட்ச வாழ்வுக்கு அந்நாட்டின் பொருளாதார விருத்தியே மூலகாரணமாகும். எமது இலங்கை நாடும் பூரண சுபீட்ச வாழ்வை அடைவதற்கு பொருளாதார விருத்தியில் மேலும் மேலும் விருத்தியடையவேண்டியிருக்கின்றது. இதற்கு கடும் உழைப்பும், விடா முயற்சியும் அவசியம்."

இவ்வாறு வவனியாத் தமிழ் பிரிவு விவசாயக் கழகத்தினர் நடத்திய விவசாயப் பொருட்காட்சிப் பரிசளிப்பு விழாவில் முக்கிய பிரமுகராகக் கலந்துகொண்ட கமத்தொழில் இலாகா அதிபர் டாக்டர் எஸ். றிச்சாட் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:-

வன்னி மாவட்டம் கமத்தொழிலுக்கு ஏற்ற ஓர் சிறந்த இடமாகும். இங்கு இதற்கு வேண்டிய நிலம், நீர்வளம் என்பன உண்டு. இங்குள்ள மக்களும் நவீன விஞ்ஞான முறையில் கமஞ் செய்தால் பெரும் விளைவைப் பெறமுடியும். இதற்கு நீங்கள் நவீன பசளை, நெல் தானியங்களைத் தெரிவுசெய்யுங்கள். கூட்டுறவு இயக்கங்கள் கடன் உதவி, பசளை என்பனவற்றை அளிக்கின்றது. இவற்றை பயன்படுத்தத் தவறக்கூடாது.

இப்பேறப்பட்ட பொருட்காட்சிமூலம் மக்கள் மத்தியில் கமத் தொழில் நவீன முறையை ஏற்படுத்த முடியும். இதற்காக வவனியாத் தமிழ் பிரிவு விவசாயக் கழகத்தினரைப் பாராட்டுகின்றேன்.

அடுத்து வவனியாப் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் பேசுகையில் இவ்வன்னி மாவட்டம் ஓர் காலத்தில் பொன் கொளிக்கும் பூமியாக இருந்து இலங்கையில் நெல் தேவையைப் பூர்த்திசெய்ததென்பதை ஞாபகமூட்டி எதிர்காலத்தில் அந்நிலைக்கு வர இவ்வன்னி மாவட்ட மக்கள் கடுமையாக உழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வவனியாப் பகுதி கமத் தொழில் உதவி அதிபர் திரு. ஜெயசீலனும் பேசினர். பரிசில்களை திருமதி றிச்சாட் வழங்கினர். திரு. டி. முருகேசம்பிள்ளை நன்றி கூறினர்.

# நீந்தச் சென்றவர் மரணம்

பளை, புதன்

தச்சுத் தொழில் செய்து கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி மரணமானர். இச்சம்பவம் பளையில் திங்கள் மாலை நடந்தது. வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அப்புத்துரை என்னும் இளைஞரே பரிதாபமரணத்திற்குள்ளானவராகும். சாவகச்சேரி மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவிய நாயகம் விசாரணை நடத்தினர்.

# ஐயாறன்

(4-மபக்கத் தொடர்ச்சி)

மேவி இன்பம் தந்திடலால்
கோலஅரன் இட்டிலியாக்
கொள்!

* * *

திருஅருளும்,குருஅருளும் பூரணமாகப் பெற்றுள்ளவிதவான் 'இம்மென்ருல் ஆயிரம்' பாடக்கூடிய நவீன காளமேகமாக இருப்பதில் வியப்பென்ன?

* * *

பணைக்கை மும்மத வேழ
முரித்தவன்
நினைப்பவர் மனம்கோயிலாக்
கொண்டவன்
அனைத்தும் வேடமாம்
அம்பலக்கூத்தனை
தினைத்தனைப் பொழுதும்
மறந்துயவனே
— திருநாவுக்கரச

# கலை அரங்கம்

## கணவன் படம் தயாரிக்க பத்மினி நடிக்கிருர்

### மாடர்ன் தியேட்டர்ஸ் படத்திலும் நடிப்பார்

பிரபல நடிகை பத்மினி டாக்டர் ராமச்சந்திரனை மணந்து ஒரு ஆண்குழந்தைக்குத் தாயானது வாசகர்களுக்குத் தெரிந்ததே. கல்யாணத்திற்குப் பிறகு அவர் சினிமாவில் நடிக்கமாட்டார் என்று பத்மினியின் கணவர் ராமச்சந்திரன் திருமணத்தின்போது கூறினர். ஆனல் அவரே இப்போது படமெடுக்கிருர். அந்தப்படத்தில் பத்மினி கதாநாயகியாக நடிக்கப்போகிருர். டைரக்டர் ஸ்ரீதர் இப்படத்தை டைரக்ட் செய்வார் என்று தெரிகிறது.

சொந்தப்படம் மட்டும் அல்ல. வெளிப்படங்களிலும் பத்மினி நடிப்பார். சென்ற வாரம் மாடர்ன் தியேட்டர்ஸார் அடுத்து தயாரிக்கவிருக்கும் சமூகப்படத்திற்காக பத்மினி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இப்படத்திற்கான கதை வசனம்சோலைமலை எழுதுகிருர். டைரக்டர் சுப்பாராவ் டைரகட் செய்யும் இப்படத்தில் யார் கதாநாயகனை நடிப்பார் என்பது தெரியவில்லை.

நடிப்பிலும் நடனத்திலும் நல்ல திறமையுள்ள நடிகை பத்மினி மீண்டும் நடிப்பது தமிழ் ரசிகர்களுக்கும் திரைப் படத் தொழிலில் உள்ளவர்களுக்கும் மகிழ்ச்சியை அளிக்கும்.

## படப்பிடிப்பில் எம். ஜி. ஆர். மயக்கமுற்ருர்

பயங்கரமான குகை. அந்தக் குகையில் ஆங்காங்கே முதலைகள் இருந்தன. நடுவில் அழகான குளம். அந்தக் குளத்திற்கு அருகில் இருந்த ராட்சஸதூண்களில் பயங்கர உருவங்கள் செதுக்கப்பட்டு இருந்தன. அந்த உருவங்களின் வாய்கள் தண்ணீரை கக்கிக் கொண்டிருந்தன.

தண்ணீரைப் பீச்சி அடிப்பதற்காக விசேஷமாக நான்கு தீ அணைக்கும் என்ஜின்கள் வரவழைக்சப்பட்டிருந்தன. இந்த நான்கு வண்டிகளிலிருந்தும் ஒரே நேரத்தில் தண்ணீர் வேகமாக வெளியே அடித்துக்கொண்டிருக்கும் வகையில் அதன் நடுவில் பகைவர்களுடன் எம். ஜி. ஆர். சண்டையிட்டுக்கொண்டிருந்தார். சிறிது நேரம் சண்டை செய்ததும் தண்ணீரின் வேகத்தால் மூச்சு விட முடியாமல் திணறிக் கீழே சாய்ந்துவிட்டார். உடனே அருகில் இருந்தவர்கள் ஓடித் தூக்கிஞர்கள். அதற்குள் அவரே எழுந்து மீண்டும் சண்டையிட்டார். ஒரு இரவு முழுவதும் இக்காட்சி படமாக்கப்பட்டது. விஜய பாரத் புரொடெக்சன்ஸார் தயாரிக்கும் "விக்கிரமாதித்தன்" படத்தில் இக்காட்சியை காணலாம். என் தங்கை நடராஜன் வசனமெழுதும் இப்படத்தை ராமதாஸ் டைரக்ட் செய்கிருர்.

---

### "செங்கமலத்தீவு"

எம். ர. வி. பிக்சர்ஸார் தயாரித்திருக்கும் "செங்கமலத்தீவு" இவ்வர்ரம் 3-ம் திகதி திரைக்கு வருகிறது. இப்படத்தில் விஜயபுரிவீரன், ஆனந்தன், ராஜஸ்ரீ, புஷ்பலதா, கலாவதி, கள்ளபார்ட் நடராஜன், எம். ஆர். ராதா ஆகியோர் நடித்துள்ளனர். கம்பச் சண்டை, குத்துச்சண்டை நிறைந்த இப்படத்தில் புலிச் சண்டையும் இருக்கிறது. சேலம் நடராஜன் வசனமெழுதியுள்ள இப்படத்திற்கு இசை கே. வி. மகாதேவன் அமைத்துள்ளார். எஸ். ராஜேந்திரன் என்ற இளைஞர் முதன் முதல் டைரக்ட் செய்துள்ள இப்படம் சேலம் ரத்ன ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்

### 'நெஞ்சில் ஓர் ஆலயம்' முத்துராமன்

**9 படங்களில் நடிக்கிருர்**

எனக்கு 'நெஞ்சில் ஓர் ஆலயம் படம் வெளிவிந்த பிறகு ஓய்வே இல்லை' என்கிருர் முத்துராமன்.

முத்துராமன் தற்போது சுமார் 9 படங்களில் நடித்து வருகிருர். அவர் நடித்துக் கொண்டிருக்கும் படங்களை அதன் தயாரிப்பாளர்கள் குறுகிய காலத்தில் வெளியிடத் திட்டமிட்டுள்ளனராம். இதனல் அவருக்கு ஓய்வே கிடைப்பது மிக அரிதாக இருக்கிறதாம். இப்படியே ஓய்வில்லாமம் நடிக்க வேண்டுமென்பதே தமது ஆசை என். முத்துராமன் தெரிவித்துள்ளார்.

---

### தமிழரசியின் 'கற்பின் பெருமை'

தமிழரசி புரொடக்ஷன் சாரின் 'கற்பின் பெருமை' என்ற படம் விரைவில் துவங்கும் என்று தெரிகிறது. இப்படத்துக்கான கதை முதலிய வேலைகளை முடித்துவிட்ட மேற்படி படநிலையத்தினர் விரைவில் நடிகர் தேர்வு நடத்துவர்.

### வரிகொடுப்போர் சங்கம்

**எம். ஜி. ஆர். துவக்குகிருர்**

தமிழ்நாடு முழுவதும் "வரிக்கொடுப்போர் சங்கம்" என்று அமைக்க பிரபல நடிகர் எம். ஜி. ஆர். முயற்சி செய்கிருர். இதற்கான திட்டங்களை அவர் வகுத்து வருகிருர். பொதுநல மன்றங்கள் இது விஷயமாக அவருடன் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் கூறினர்.

மேல்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நடிகர் எம். ஜி. ஆர். 21-ம் தேதியன்று மாலை 3 மணிக்கு பதவிப்பிரமாணம் செய்து பதவியேற்ருர். இது குறித்து பலர் அவருக்கு பாராட்டுகளும் விருந்துகளும் நடத்திஞர்கள்.

---

### கொழும்பில் காருகுறிச்சி கச்சேரி

**5-ம் தேதி நடைபெறும்**

கொழும்பு, புதன்

இலங்கை சங்கீத நாட்டிய சங்கம், சைவமங்கையர் கழகம் ஆகியவற்றின் ஆதரவில் வருகிற 4, 5, 6-ம் தேதிகளில் 1962-ம் ஆண்டு இசை விழா நடைபெறும். 4-ம் 6-ம் தேதிகளில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்திலும், 5-ம் தேதி வெள்ளவத்தை ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயத்திலும் விழா நடைபெறும்.

5-ம் தேதி விழாவில் நாதஸ்வர மேதை காருகுறிச்சி பி. அருணசலம் கோஷ்டியாரின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும்.

---

### பாலாஜி ஜெமினி வழியில் ரகுநாத்

நீண்ட நாட்களாக கோல்டன் ஸ்டுடியோவில் பணியாற்றி வந்த ரகுநாத் சர்வோதய சித்ரா படக்கம்பனியார் தயாரிக்கும் 'பக்தகபீர்' என்ற சண்டைப் படத்தில் நடிக்கிருர்.

இவர் மன்னர் காலி ராஜாவாகநடிக்கிருர். இவர் முன்னிலையில் ராஜநர்த்தகியாக வரும் குசலகுமாரி ஆடிய நடனம் சமீபத்தில் படமாக்கப்பட்டது.

ஜெமினி கணேசன், பாலாஜி ஆகியோர் ஸ்டுடியோவில் பணியாற்றிக்கொண்டிருந்த பிறகு படத்தில் நடிக்கத் துவங்கி இன்று பிரபல நட்சத்திரங்களாக விளங்குகின்றனர். அவர்கள் போல் தானும் ஆக வேண்டுமென்று அழகும் படிப்பும் நிறைந்த ரகுநாத் ஆசைப் படுவதாக தெரிகிறது.

## "கலைக்கும் அறிவுக்கும் எவரும் தடைபோட முடியாது"

### வட்டுக்கோட்டை இசை விழாவில் வித்துவான் ஜகந்நாதன் உரை

வட்டுக்கோட்டை, புதன்

"இசைத்தமிழால் நன்மையுண்டு. இசையில் வசப்படாதவன் மனிதனேயல்ல. மக்களின் நிலையை உயர்த்துவது இசை. ஆண்டவன் திருவடிகளை அடையச்செய்யும் ஆற்றல் இசைக்கு உள்ளது. இன்னிசையின் சுவையினை அனைவரும் உணர்வர்."

கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் வட்டுக்கோட்டை இளைஞர் உடலுள விருத்திச்சங்க வெள்ளி விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளான இசைவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழில் மூன்று பிரிவுகள் உண்டு. இயல், இசை, நாடகம் என அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. இசையிலே இயலுண்டு. நாடகத்திலே இசையும் இயலும் உண்டு. இசைத்தமிழ் கேட்டாரை இன்புறச்செய்கின்றது. பாரதி தனது பாட்டிலே இசையினல் ஏற்படும் விளைவுகளைக் காட்டியுள்ளார். தமிழ்த் தாய்மார்களுக்கு இயற்கையாக இரு இயல்புகள் உண்டு. ஒன்று தாலாட்டு. மற்றையது ஒப்பாரி. தமிழ்நாட்டிலே இசை சம்பந்தப்பட்ட இலக்கண இலக்கிய நூல்கள் பல இருந்தன. தற்போது சில நூல்களே அகப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டின் உள்ள இசைக்கருவிகளில் 'குழல்' முக்கியமானது. 'குழல்வழி நின்றது யாழே' என்பதும், 'குழலினிது யாழினிது என்பர்' என்பதும் குழலின் சிறப்பை எடுத்துக்காட்

(-8ம் பக்கம் பார்க்க)

மாமைட் எனக்கும் என் குடும்பத்தாருக்கும், நற்சுகமும் பெலனும் தருகிறது



இவர்கள் யாவரும் "நன்ருகச்" சாப்பிடுகிருர்கள். அதிக சக்தியும் பெலனும் "உள்ளவர்களாய் இருக்கிருர்கள். பலத்திற்கும் வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமாஞல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும் போழுது அதிகக் டியானருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைப்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




மாமைட்

# " ஒற்றுமையால்தான் இலங்கை வளம் பெறும் "

## கம்யூனிஸ்ட் கட்சி மே தின கூட்டத்தில் திரு. விஜயரத்தின

காங்கேசன்துறை, புதன் "இலங்கை வளம்பெற வேண்டுமாயின் இங்குவாழும் இரு பெரும் சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழவேண்டும். தமிழ் சிங்கள மக்களிடையே பரஸ்பரம் நல்லுறவை ஏற்படுத்தவேண்டும்".

பாரிஸ்டர் திஸ்ஸவிஜயரத்தின நேற்று மாலை காங்கேசன்துறை ஸ்புட்னிக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக்கிளை ஆதரவில் நடைபெற்ற மேதின விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

"இலங்கையில் பயங்கரமானதோர் நிலை உண்டாகியிருக்கிறது. இன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்கு லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் உதவி புரிந்தன. இடதுசாரிக் கட்சிகளுக்கிடையே பிரிவினை வருமானல் இந்த நாட்டில் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிபீடத்தில் அமரும் என்பதற்கையமில்லை".

இந்த விழாவிற்கு டாக்டர் எஸ். வி. சீனிவாசகம் தலைமை வகித்துப் பேசகையில் தொழிலாளர்களை இனி முதலாளிகளால் நசுக்கமுடியாது. சந்திரமண்டலம் சென்ருயினும் தொழிலாளர்கள் தமது உரிமைகளை நிலைநாட்டியே தீருவர்.

திரு. அ. வைத்திலிங்கம் பேசும்போது தெரிவித்ததாவது:-

"தொழிலாளருக்கு அரசியல் அறிவுவேண்டும். இலங்கை கடந்த ஆறுவருட காலத்தில் பலவிதமான முன்னேற்றங்களை அடைந்துள்ளது. பஸ் சேவை தேசிசியமயமாக்கப்பட்டது. பாடசாலைகள் அரசினரால் கையேற்கப்பட்டன. பெட்ரோலியம் கார்ப்பரேஷன் உருவாக்கப்பட்டது ஆரம்பத்தில் இத்தேசியமயத் திட்டங்களினால் கஷ்டங்கள் சிலருக்கு ஏற்படினும் இறுதியில் நன்மையே விளையும். அரசாங்கம் எப்போதும் பொதுமக்களுக்கு உரிமையானவையாக இருத்தல் வேண்டும். இன்று தமிழ்மக்கள் கஷ்டங்கள் பல அநுபவிக்க அடிகோலியவர்கள் மிஷனரிமாரேயாகும். அவர்கள் எமது நாட்டில் வைத்த அன்புதான் பாடசாலைகள் நிறுவக் காரணம் என்று கூறுவது அர்த்தமற்றது. அவர்கள் தமது ஏகாதிபத்தியம் இங்கு நிலைத்துநிற்க வேண்டும் என்று எண்ணியே கல்லூரிகள் நிறுவினர் என்பதனை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. சர்வஜன வாக்குரிமை 1937-ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தபின் பல நன்மைகள் ஏற்பட்டன. அரசியல் உரிமை பொதுமக்களாகிய எமக்கும் வேண்டும் என்ற எண்ணத்தை சர்வசன வாக்குரிமைதான் தோற்றுவித்தது. சர்வசன வாக்குரிமையினல் தேசிய பாஷையிலே கல்வி பயிலக்கூடிய நிலை வந்தது. நமது நாட்டில் இலவசக் கல்வித் திட்டம் தவிர்க்கமுடியாது. கிராமங்களில் உள்ள மக்கள் விசேஷமான அறிவுபெறுதல் அவசிமானது. இந்த அறிவுப் பெருக்கத்திற்கு இலவசக் கல்வி பேருதவியாகவுள்ளது. இலவசக் கல்வித்திட்டம் 1945-ம் ஆண்டு நடைமுறைக்கு வந்ததும், கலைஞர்களிடையே நாமும் ஆங்கிலக் கல்விபயின்று உத்தியோகம் வகிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. தற்போது தாய்மொழிப் பற்று தீவிரமாகக் காணப்படுகின்றது. கல்வி அனைவர்க்கும் சமசந்தர்ப்பம் அளிக்கவேண்டும். தற்போது தனித்தியங்க நினைக்கும் பாடசாலைகளையும் அரசினர் தேசியமயமாக்கவேண்டும். இலட்சக்கணக்கான இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் நலம்பெற அங்குள்ள பாடசாலைகளை எடுக்கவேண்டும். அவர்களுக்கும் எமக்குள்ள உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

மக்கள் உண்மையான தேசியக் கல்வி பெறுவதில் அக்கறை காட்டவேண்டும். விஞ்ஞான வளர்ச்சி மலிந்துள்ள இந்நாளில் விஞ்ஞானக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். மற்றைய நாடுகளைவிட இலங்கைதான் இலவசக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது. மற்றைய நாடுகள் பொருளாதார வளத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தன. பொருளாதார வளர்ச்சிக்குக் கல்விவேண்டும்.

### தமிழ் முதலாளிகள் முதலீடு செய்யவேண்டும்

திரு. கார்த்திகேசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

கலை, பண்பாடுத் துறைகளிலே சிறப்புப்பெற்றிருக்கிற தமிழர்களைப் பொறுத்த வரையில் அரசியலில் தலைகுனிய வேண்டியுள்ளது. தமிழ் முதலாளிகள் தமிழ்மக்கள் வாழும் இடங்களில் தமது பணத்தை முதலீடு செய்யவேண்டும். தமிழ் மக்கள் முன்னேற வேண்டுமானல் அரசினரின் முற்போக்குத் திட்டங்களை ஆதரிக்க வேண்டும்.

மற்றும் பலர் பேசினர். கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வியாழன் 3-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை. 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 பேச்சு, 7-45 'வண்ணமகள்' - நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லய வின்யாசம், 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 கோயம்புத்தூர் வி. ராஜலட்சுமி - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கோயம்புத்தூர் வி. ராஜலட்சுமி - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 எஸ். தர்மாம்பாள் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்,

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 ஏ. கோபாலகிருஷ்ணன் - பேச்சு, 7-15 ராகம், தானம், பல்லவி டி. விஸ்வநாதன் - புல்லாங்குழல், 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்தசங்கீதம். 9-30 அகில பாரத இலக்கிய நிகழ்ச்சி.

# காவேரிப் பள்ளத்தாக்கில் பெட்ரேல் ஆராய்ச்சி வெற்றியளித்துள்ளது

திருச்சி மே 1

திருச்சியிலுள்ள இந்திய எண்ணை காஸ் கமிஷனல் சென்ற இரண்டு வருட காலமாக காவேரிப் பள்ளத்தாக்கில் நடாத்தப்பட்டு வந்த எண்ணை ஆராய்ச்சி வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகுதி கலக்டர் திரு. ஜி.எம். பாத்ஷா பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் மேற்கண்ட தகவலைத்தெரிவித்தார்.

பாண்டிச்சேரியிலிருந்து கன்னியா குமரிவரையான பகுதியில் பெட்ரேல் கண்டுபிடிப்புக்கான ஆராய்ச்சி நடைபெற்று வருவதாகவும் திரு. பாத்ஷா மேலும் தெரிவித்தார்.


ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்ட்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமோ! நெஸ்டோமோல்டில் ... விருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! ... நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக விருக்க வேண்டு... மாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில், ... இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடை... தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—குளிர்மையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழு... உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல... டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிர ... உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொ... களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மை... யும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான் விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

# “நோட்டுக்களை அச்சடித்து நாட்டை ஆளமுடியாது”

## மேதினக் கூட்டத்தில் யு. என். பி. தலைவர் டட்லி

கொழும்பு, புதன்

**“அதிக ரூபாய் நோட்டுக்களை அச்சடிப்பதால் மட்டும் ஒரு நாட்டை நிர்வகிக்க முடியாது. நோட்டுக்கள் அச்சடிப்பதற்குமுன் அதன் உற்பத்தி பெருகவேண்டும்” என யு. என். பி. மேதினக் கூட்டத்தில்பேசிய திரு. டட்லி சேனநாயக்கா கூறினர்.**

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரு சம்பவங்களைக் கொண்டாடுகிறது. அதில் மேதினம் ஒன்று. மற்றது ஒருவருட அவசரகால ஆட்சி. ஒன்றரை வருடங்களுக்குமுன் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்தியதாகக் கூறிய லங்கா சமசமாஜக்கட்சி இப்போது அரசாங்க விரோத சுலோகங்களைக் கோஷிக்கிறது.

வேலையில்லாத்திண்டாட்டம், வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு ஆகிய இரு அபாயங்களைமக்கள் எதிர்நோக்கியிருக்கின்றனர். 6 வருடங்களுக்குமுன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரத்திற்கு வந்தபின் நாட்டின் ஜனத்தொகை 20 லட்சம் அதிகரித்திருக்கிறது. நாளுக்குநாள் வாழ்க்கைச் செலவு உயர்ந்து தொழிலாளர்களுக்கு கஷ்டத்தையளித்திருக்கிறது. இந்த இரண்டு பிரச்னைகளுக்கும் உடனடி பரிகாரத்தை அவர்கள் தேடவேண்டும்.

அநேக அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதாக மக்களிடம் அரசாங்கம் கூறியது:மகாவலிகங்கையை யாழ்ப்பாணத்திற்கும், களனிகங்கையைக் குருநாக்கலுக்கும்திருப்பி விடுவதாக அரசாங்கம் சில ஆண்டுகளுக்கு முன் கூறியது. ஆனல் இரு நதிகளும் வழக்கமான திசையிலேயே இன்னும் ஓடிக்கொண்டிருக்கின்றன.” என்றும் திரு. டட்லி கூறினர்

---

# “சுதந்திரக் கட்சியிலிருந்து முதலாளிகளை வெளியேற்றினல்... எம். ஈ. பி. அரசாங்கத்தை ஆதரிக்கும்”

—திரு. பிலிப்

கொழும்பு, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள முதலாளித்துவ பந்தங்கள் வெளியேற்றப்பட்டால் எம். ஈ. பி. கட்சி, அரசாங்கத்தை ஆதரிக்கும் என அக்கட்சியின் மேதினக்கூட்டத்தில் திரு. பிலிப் குணவர்த்தன கூறினர்.

“ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள முன்னேற்றச்சக்திகள் ஒன்றுசேர்ந்து, அதிலுள்ள முதலாளிகளை வெளியேற்றவேண்டும்.

யு. என். பி. க்கட்சி தன் ஆட்சிக்காலத்தில்மேதினத்தை விடுமுறை தினமாக்க மறுத்துவிட்டு, இப்போது அதைக் கொண்டாடுவது அதிசயமான விஷயம். கடந்த ஆண்டுதான் மேதினம் தொழிலாளர் திருநாள் என்பதை ஐக்கியதேசியக் கட்சி உணர்ந்தது. யு. என். பி. மேதினக்கூட்டத்தில் சிவப்புக்கொடிகளுடன் பச்சை நிறமும் கலக்கப்பட்டிருக்கிறது

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சோஷலிஸத்தைப்பற்றி வானளாவப் பேசிவருகிறது. ஆனல் நடைமுறையில் ஒன்றுமே அது செய்யவில்லை. காலஞ்சென்ற பிரதமரின் கொள்கைகளை வாயளவில் பேசியதுடன் மட்டும் அது நின்றுவிடுகிறது.

ஆயினும் ஐக்கியதேசியக் கட்சியைவிட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சிறிது மேலானது, எனவே ஐக்கியதேசியக்கட்சி மீண்டும் பதவிக்குவர மக்கள் அனுமதிக்கக்கூடாது.

திருவாளர்கள் மைத்திரிபாலசேனநாயக்கா, வி. பி. டி' சில்வா, பதியுதீன் முகம்மது ஆகிய முதலாளிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருப்பதால்தான் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

கல்விமந்திரி இலங்கையைக் “கோழிக்கூடு” எனக்குறிப்பிட்டிருக்கிறர். இந்தக் கோழிக் கூட்டைச் சிருஷ்டித்தது அவரேதான்” என்றும் திரு. பிலிப் கூறினர்.

---

## நேரு விண்ணப்பம்

புதுடில்லி, மே 2

அணுசோதனை நடத்தவேண்டாம் என பிரதமர் நேரு அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் மீண்டும் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறர்.


## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

‘விக்னராஜா’ பரிசுக் கிண்ணத்துக்காக ‘ஈழநாடு’ நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..................

கல்லூரி ..................

எனது பெயர் ..................

விலாசம் ..................

இக்கூப்பனைக் கத்தரித்து ‘கிரிக்கெட் வீரர் 1962’, C/o. ‘ஈழநாடு’, தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.


## இருவேறு கொள்கையில் அண்ணனும் தம்பியும்

“டி. எஸ். சேனநாயக்கா 1952 ஏப்ரல் மாதம் அகால மரணமானர். அதுவரை ஒலிவர் குணத்திலகா உள்நாட்டு மந்திரியாகக் கடமையாற்றி வந்தார். அந்தக்காலத்தில் இலங்கையில் இந்துக்களைப்பாதிக்கும் அதிமுக்யத்துவம் வாய்ந்த பிரச்சினை விவாதம் ஒன்று நாட்டில் நடைபெற்றுவந்தது.மந்திரி என்ற தோரணையில் ஒலிவர் இந்த விஷயத்தில் பங்கெடுத்துக் கொண்டார்.”

“அந்நாட்களில் சுப்றீம் கோட்டு நீதியரசராக இருந்த எனது அண்ணர் நாகலிங்கமும், நானும் ஒருவருகொருவர் எதிராக இச்சீர்திருந்த விடயத்தில் இரு வேறு கொள்கையுடையவராய் இருந்தோம்.”

பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் எழுதும் ஈழப்பாட்டனின் கடிதங்கள் விளக்கம் தரும். 6-5-62 ‘ஈழநாடு’ ஞாயிறு இதழில் பாருங்கள். ——

## மரதன் ஓட்டப்போட்டி

வட்டுக்கோட்டை, புதன்

வட்டுக்கோட்டை இளைஞர் உடலுள விருத்திச்சங்க வெள்ளி விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றிக்கிண்ணங்களை பி. சுவேந்திரராசாவும், சி. தர்மராசாவும் பெற்றனர்.

---

## 80-வது வயதில் பொன்னடை போர்த்திக் கௌரவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்ப் புலவர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயரின் 80-வது ஆண்டு தொடக்க விழா இம் மாதம் 4-ம் திகதி மாலை சைவ பரிபாலன சபையாரின் நாவலர் நினைவு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. புலவருக்குப் பொன்னடை போர்த்தி வாழ்த்துப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

---

## கலைக்கும் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டுகின்றன. குழல் செய்வது எளிது. யாழ் செய்தல் அரிது. ஆயிரம் நரம்புகளுடைய பேரியாழ் காற்றினுடைய வேகத்திலே இசைக்கும். இது நமக்கு வியப்புத்தரும் செய்தியாகும். பாணர்கள் இசைக்கருவிகளை இசைப்பதோடு பாடுவார்கள். புலவர்கள், பாணர்கள், கூத்தர்கள் நாடுநாடாகச் சென்று தத்தம் திறமைகளைக் காட்டிப் பரிசுகள் பெறுவர். கொடுமைத்தன்மையைப்போக்குவது இசை.

### கலைக்கும் அறிவுக்கும் தடைபோட முடியாது

கலைக்கும், அறிவுக்கும் தடைபோட எவராலும் முடியாது. கலைக்கு நாடு, இன, மத பேதமில்லை. கலைக்குத் தடைபோடுபவர்கள் கலையில் அன்பு இல்லாதவர்கள். தமிழ் நாட்டிலே எல்லாம் மாறுதல் அடைந்துவந்தாலும், கர்நாடக சங்கீதமும், சோற்று உணர்வும் மாறவில்லை. சங்கீதம் ஒருமைப்பாட்டை உண்டாக்குகிறது. கலைப்பொருள் கேட்டதுடன் மாத்திரம் இன்பம் பயப்பது அல்ல. அதனை நினைத்தபோதும் இன்பம் பயப்பது. நல்ல கலையை ரசித்தால் அது நள்ளிரவிலும் அவனுக்கு அந்த இன்பநினைவு ஊடுருவிச் செல்லும். இதுவே இசைக்கலையிலுள்ள சிறப்பு. இன்ப அநுபூதியை இசை தருகிறது. இசை பொதுமையானது.”

இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## ‘தவறுகளை சீன உணரவேண்டும்’ பாரதம் அறிவிப்பு

புதுடில்லி, மே 2

“சென்ற ஆண்டுகளில் விட்ட தவறுகளை சீன உணர்ந்து, சமாதானத்தை நிலைநாட்ட முன்வரவேண்டும். ஏற்கனவே சீனவுக்கு அனுப்பப்பட்ட பதினெரு குறிப்புகளாலும் பாரதம் இதைத்தான் வற்புறுத்தியிருக்கிறது.”

சீனவுக்கு பாரதம் அனுப்பிய கடைசிக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பு கடந்த ஏப்ரல் மாதம் 30-ம் திகதி அனுப்பப்பட்டது.

குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

“எல்லைவிஷயத்தில் சீன எவ்வளவு அக்கறை கொண்டுள்ளதோ அதுபோல் பாரதமும் அக்கறை கொண்டுள்ளது. பாரத பிராந்தியத்தில் சீனர் குடியேறும் விஷயத்தில் பாரதம் ஒருபோதும் விட்டுக்கொடுக்காது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து சீன விலகிக்கொள்ளும்வரை சீனவுடன் பேச்சுவார்த்தை நடத்த பாரதம் தயாராக இல்லை.”

## ரூபா மூன்றரைக்கோடி செலவில் பாலம்

### பிரதமர் இன்று அடிக்கல் நாட்டுவார்

கொழும்பு, புதன்

களனிகங்கையின்மீது ஹன்வெல என்ற இடத்தில் சுமார் மூன்றுகோடி ஐம்பது லட்சம் ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் பாலத்தின் அடிக்கல்லை, நாளைக் காலை 10 மணிக்கு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நாட்டுவார். அடிக்கல் நாட்டு விழாவில் மந்திரிகள் எம். பி. க்கள் உட்பட பலரும் கலந்துகொள்வார்கள்.

களனிகங்கையின்மீது ஏற்கனவே மூன்று பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

---


### விற்பனைக்கு

பூநகரி நல்லூர் ஆலங்கேணி தென்னந் தோட்டம் 10 ஏக்கர் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு ரெட்ணசபாபதி, செட்டியங்குறிச்சி, பூநகரி.



## 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தினபுரி)
விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)
நியூசினிமா (குருணகலை)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன், என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
# பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
பிரேம் நஸீர்-எம்.என்.ராஜம் நடித்த
ஒரே வழி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.